SRI LANKA
histories that connect
සබැඳි ඉතිහාසය
இணைந்த வரலாறுகள்

# வரலாறு பாட வகுப்பறையில் காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பான விமர்சன ரீதியான சிந்தனையை மேம்படுத்துவதற்கான ஆசிரியர் வழிகாட்டி




COLLECTIVE FOR HISTORICAL DIALOGUE & MEMORY

EuroClio
Inspiring History and Citizenship Educators

SCOPE
Strengthening Social Cohesion and Peace in Sri Lanka

Co-funded by the European Union

german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT

Implemented by:
giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

# ACKNOWLEDGEMENTS


**Authors**

Bridget Martin, Judith Perera



**Published by**

EuroClio - European Association of History Educators as part of the project *Histories that Connect Sri Lanka II*



**Copyright**

CC BY 4.0



**To cite this publication:**

Martin, B., Perera, J. (2024). Developing Critical Thinking about Cause and Consequence in the History Classroom. *EuroClio - European Association of History Educators*.

**Supported by**

*This publication was supported by the Strengthening Social Cohesion and Peace in Sri Lanka (SCOPE) programme. SCOPE is co-funded by the European Union and the German Federal Foreign Office and implemented by GIZ in partnership with the Government of Sri Lanka. The content of the publication does not represent the official position of the European Union, the German Federal Foreign Office, GIZ, or the Government of Sri Lanka.*

# 1.

# வரலாற்று பாட வகுப்பறையில் காரணம் மற்றும் விளைவு தொடர்பான அறிமுகம்



# 1a. காரணம் மற்றும் விளைவு என்றால் என்ன?

வரலாற்று பாட வகுப்பறையில்“காரணம்”மற்றும்“விளைவுகள்”ஆகியவை ஒரு முக்கிய பகுப்பாய்வு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் கடந்த காலத்தில் என்ன நடந்தது, அந்நிகழ்வு ஏன் நடந்தது அல்லது எப்படி நடந்தது போன்ற கேள்விகளை முன்வைப்பதன் ஊடாக வரலாற்று கல்வியை அணுக முயற்சிக்கின்றனர். வரலாற்று நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்யும் போது, அவ்வரலாற்று நிகழ்வு இடம்பெறுவதற்கு வழிவகுத்த பல்வேறு காரணிகள் (காரணங்கள்) மற்றும் அந்த வரலாற்று நிகழ்வின் விளைவாக ஏற்படும் பல்வேறு விளைவுகள் அல்லது தாக்கங்கள் (விளைவுகள்) குறித்து தமது பகுப்பாய்வுகளை மேற்கொண்டு, அக்கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர். பெரும்பாலும் இது போன்ற பகுப்பாய்வுக் கருத்துக்களை மாணவர்களுக்கு வகுப்பறையில் வரலாற்று கல்வியாக திறம்பட பெற்றுக்கொடுக்க வரலாற்று பாட வகுப்பறையில் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துவது பற்றி ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியமாக கருதப்படுகின்றது.

ஒவ்வொரு வகைக்கும் குறிப்பிடத்தக்க காரணங்கள் மற்றும் விளைவுகளின் வகைகள் உள்ளன. குறிப்பாக வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்களைக் கருத்தில் கொள்ளும்போது, அந்த குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வு இடம்பெறுவதற்கு தூண்டுகோலாக அமையப்பெற்ற அடிப்படைக் காரணங்கள் அல்லது வினையூக்கிகள் காணப்படுகின்றன. குறித்த காரணங்கள் மற்றும் வினையூக்கிகள் ஏற்படுத்தும் தாக்கத்தை வரலாற்று ஆசிரியர்கள் மதிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, முதலாம் உலகப் போரின் தொடக்கத்தைப் பற்றி வரலாற்று ரீதியாக விவாதிக்கும் போது, ஆர்ச்டியூக் ஃபேர்டினான்ட் படுகொலை தொடர்பில் வரலாற்றாசிரியர்கள் குறித்த காலப்பகுதியில் காணப்பட்ட அடக்குமுறையான போக்கு, கூட்டமைப்புகள், ஏகாதிபத்தியம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்கள் குறித்து வாதிடலாம்.

வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான விளைவுகளை கருத்தில் கொள்ளும்போது, குறிப்பாக, வரலாற்று ஆசிரியர்கள் அந்நிகழ்வு இடம்பெறுவதற்கான நோக்கம் அல்லது குறித்த நிகழ்வு ஏற்படுத்திய திட்டமிடப்படாத விளைவுகள் குறித்து பகுப்பாய்வு செய்கிறார்கள். உதாரணமாக, முதலாம் உலகப் போரின் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது, ஜேர்மனியை இராணுவமயமாக்கி, ஐரோப்பாவில் அமைதியை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட வெர்சாய்ஸ் உடன்படிக்கை முதலாம் உலகப்போரின் விளைவாக ஏற்பட்ட நிகழ்வு என்று வரலாற்று ஆசிரியர்கள் வாதிடலாம். எவ்வாறாயினும், வெர்சாய்ஸ் உடன்படிக்கையின் எதிர்பாராத விளைவாக ஜேர்மனியின் ஸ்தீரத்தன்மை மீளக்கட்டியமைக்கப்பட்டது. இது பாசிச வாதிகள் மற்றும் நாஸி கட்சியின் எழுச்சிக்கு வழிவகுத்தது. இந்த வரலாற்று நிகழ்வின் விளைவுகள் தனிநபர்களையும் குழுக்களையும் வெவ்வேறு வழிகளில் எவ்வாறு பாதித்திருக்கலாம் என்பதையும் வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்கின்றனர். அத்துடன் வரலாற்று நிகழ்வுகளின் காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றிய வரலாற்று முன்னோக்குகளின் வரம்பு தொடர்பிலும் தமது ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

# 1b. காரணம் மற்றும் விளைவு குறித்த பகுப்பாய்வு ஏன் முக்கியமாக கருதப்படுகின்றது.

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்பான காரணங்களையும் விளைவுகளையும் பகுப்பாய்வு செய்வதன் மூலமாக வரலாற்று வகுப்பறையில் விமர்சன ரீதியான சிந்தனையை ஊக்குவிக்க முடியும். வரலாற்று நிகழ்வுகளின் காரணங்களையும் விளைவுகளையும் மாணவர்கள் பகுப்பாய்வு செய்ய முடிந்தால், அவர்கள் தங்கள் கற்றலுடன் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளை எளிதாக நினைவில் வைத்துக்கொள்ள முடியும். ஆனால் அதனையும் தாண்டி குறித்த வரலாற்று கற்கையுடன் தொடர்புடைய உயர்மட்ட பகுப்பாய்வுகள் குறித்து சிந்திக்க முடியும். வரலாற்று நிகழ்வுகள் ஒருபோதும் தனித்தனி நிகழ்வுகளாக இடம்பெறுவது இல்லை. ஆகையால் காரணங்களையும் விளைவுகளையும் புறக்கணிக்கும் வகையில் வரலாற்று நிகழ்வுகளை மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடாது. அத்துடன் காரணங்களும் விளைவுகளும் வரலாற்று நிகழ்வுகளை காலம் மற்றும் கருப்பொருட்களின் பரந்த கட்டமைப்பிற்குள் வேரூன்றி காணப்படுகின்றன. என்ன நடந்தது, ஏன் நடந்தது அல்லது எப்படி நடந்தது, அதன் விளைவாக என்ன நிகழ்வுகள் இடம்பெற்றது என்பதைப் புரிந்துகொள்வது வரலாற்று வகுப்பறையில் மாணவர்களின் சிந்தனையை மேம்படுத்துவதற்கு இன்றியமையாத காரணியாக அமைகின்றது. காரணங்கள் மற்றும் விளைவுகளுடன் ஈடுபடுவதன் மூலம், மாணவர்கள் வரலாற்று நிகழ்வுகளுக்கு வழிவகுத்த காரணிகளின் வகைகளை அடையாளம் காணவும், அவற்றை சரிவர புரிந்து கொள்ளவும், அதற்கமைவாக பகுப்பாய்வு செய்யவும் மற்றும் வரலாற்று நிகழ்வுகளை மதிப்பீடு செய்யவும் முடியும். காரணங்கள் மற்றும் விளைவுகளைப் புரிந்துகொள்வதன் மூலம் மாணவர்கள் தங்கள் விமர்சன ரீதியான சிந்தனையை வளர்த்துக் கொள்கிறார்கள், இது அவர்களின் வரலாற்று பாடத்தை எழுதுவதற்கும் கற்றுக்கொள்வதற்கான ஆற்றலையும் வளர்ப்பதாக அமைகின்றது.

விமர்சன ரீதியான பகுப்பாய்வு, காரணம் மற்றும் விளைவுகள் தொடர்பான மதிப்பீடு என்பது வரலாற்று ஒழுக்கத்தின் ஒரு அடிப்படை பகுதியாகும். எனவே இவ்விரண்டும் வரலாற்று பாட வகுப்பறைகளில் சமமான மற்றும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். மதிப்பீடு செயன்முறையானது விமர்சன ரீதியான சிந்தனைக்கு வழிவகுக்கும். பெரும்பாலும் மனப்பாடம் செய்வதைச் சார்ந்திருக்கும் கல்வி முறைகளில் கூட, விமர்சன சிந்தனைக்கு மகத்தான மதிப்பு உண்டு. நாம் மிகவும் கடினமாக முயற்சித்தாலும், துண்டிக்கப்பட்டதாகத் தோன்றும் அல்லது நமக்குச் சிறிதும் அர்த்தமில்லாத உண்மைகள் மற்றும் விவரங்களை நினைவில் கொள்வதில் சிரமம் இருப்பதாக அறிவாற்றல் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் மாறாக, நாம் ஆழமாக சிந்திக்க வேண்டிய மற்றும் நமக்கு அர்த்தமுள்ள விடயங்களை நினைவில் கொள்வதில் மிகவும் வெற்றிகரமானவர்கள். எனவே, வரலாற்றுப் புரிதல் மற்றும் திறன்களை வளர்ப்பதில் முக்கிய அங்கமான வரலாற்றில் ஏற்படும் காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி மாணவர்கள் விமர்சன ரீதியாக சிந்திக்க வேண்டும், மேலும் மாணவர்கள் முக்கியமான தகவல்களைத் தக்கவைத்துக்கொள்ள உதவுவதில் குறிப்பிடத்தக்க நன்மைகள் உள்ளன.

# 2.

# வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவு பற்றிய விமர்சன ரீதியான சிந்தனையை வளர்ப்பதற்கு உதவியாக அமையும் பல்வேறு வகையான கேள்விகள்



நாம் மாணவர்களிடம் கேள்விகளைக் கேட்கும் போது, பல்வேறு இலக்குகளை மனதில் கொண்டு கேள்வியை அமைக்கலாம். இந்த பகுதியில், மாணவர்களின் சிந்தனையை விரிவுபடுத்துவதற்கான வெவ்வேறு வழிகளையும், மாணவர் கற்றல் பற்றிய பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்த வரலாற்று ஆசிரியர்களுக்கு பயன்படும் நான்கு வகையான கேள்விகளை இப் பகுதியில் பார்ப்போம். ஒரு கேள்வியானது, ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்களுக்கு பங்காற்றும் வகையில் அமையலாம், எனவே இந்த வகைகள் சில நேரங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும். எவ்வாறாயினும், ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில் பல்வேறு இலக்குகளை கருத்திற்கொண்டு வெவ்வேறு கேள்விகளை முன்வைக்கலாம். அதன்மூலம் கற்றல் செயற்பாடுகளின் போது பல விதமான கேள்வி வகைகளைப் பயன்படுத்தி மாணவர்களின் சிந்தனையை வளர்ச்சியடைச் செய்யலாம்.

# 2a. வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான புரிதலை சரி பார்ப்பதற்கு கேள்விகளைப் பயன்படுத்தல்

மாணவர்கள் வரலாற்று கற்கைகளின் போது தங்கள் விமர்சன ரீதியான சிந்தனையை கட்டியெழுப்ப மற்றும் அதற்கான அடித்தளத்தை கொண்டிருப்பதை உறுதி செய்யவும். வரலாற்று கற்கைகளின் போது மாணவர்கள் கற்கை தொடர்பான முக்கிய தகவல்களைப் புரிந்துகொண்டார்களா என்பதைச் சரிபார்ப்பதற்கு கேள்விகள் அவசியமாகும். எடுத்துக்காட்டாக, நிகழ்வுகளின் அடிப்படையிலான காலவரிசை, அத்தியாவசிய மற்றும் தவிர்க்க முடியாத உண்மைகள், ஆதாரங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தொடர்பான சரியான புரிதல் இல்லாமல் மாணவர்களால் வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்களையும் விளைவுகளையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, மதிப்பீடு செய்ய முடியாது. ஆசிரியர்கள் பாடநூல் மூலமாக, அடிப்படை சான்றுகள் அல்லது வேறு ஏதேனும் வழிமுறைகள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களை மாணவர்கள் புரிந்துகொண்டார்களா மற்றும்ஃஅல்லது அதனை நினைவில் வைத்திருக்கிறார்களா என்பதைச் சரிபார்ப்பதற்காக குறித்த வரலாற்று கற்கைகள் தொடர்பான புரிந்துணர்வைச் சரிபார்க்கும் கேள்விகளை முன்வைப்பதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். குறித்த கற்கை செயற்பாடுகளின் போது ஆசிரியர்களால் முன்வைக்கப்படும் கேள்விகள், ஆசிரியர்களுக்கு ஏதேனும் தவறான புரிதல்கள் இருந்தால் அதனை திருத்தி அமைக்கவும், மேலும் சிக்கலான பணிகளுக்கு முன்னேறவும், வரலாற்று கற்கைகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் அறிவில் உள்ள இடைவெளிகளைக் கண்டறியவும் உதவியாக அமைகின்றன.

சில வரலாற்று வகுப்பறைகளில், கற்பிக்கப்பட்ட வரலாற்று பாடம் தொடர்பில் மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ள புரிதலை சரிபார்க்கும் நோக்கில் இந்த வகையான கேள்விகள் கற்பித்தல் செயற்பாடுகளின் இறுதியில் மாத்திரமே கேட்கப்படுகிறது. இது மிகவும் சிக்கலான நிலைக்கு மாணவர்களை கொண்டு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஏனெனில் வரலாறு என்பது ‘சரி’ அல்லது ‘தவறான’ பதில்கள் மற்றும் உண்மைகள் என்ற உணர்வை உருவாக்க முடியும், மாறாக கடந்த காலத்தின் விவரிப்புகள் மற்றும் விளக்கங்கள் போட்டியிடக்கூடியவை, சிக்கலானவை மற்றும் பலதரப்பட்டவை. எனவே, புரிந்துகொள்வதைச் சரிபார்ப்பதை நோக்கமாகக் கொண்ட கேள்விகளுக்கு நம்மை மட்டுப்படுத்தாமல் இருப்பது முக்கியம் என்றாலும், இந்தக் கேள்விகள் மேலும் கற்றலுக்கான இன்றியமையாத தொடக்க புள்ளியாக இருப்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டும் என்று அர்த்தமல்ல.

வரலாற்று கற்கையின் போது மாணவர்கள் தாங்கள் பெற்றுக்கொள்ளும் புரிதல் தொடர்பில் சரிபார்ப்பதற்கு உதவிடும் கேள்விகள் தொடர்பான உதாரணங்கள்:

- 1453ம் ஆண்டில் கான்ஸ்டான்டி நோபலைக் கைப்பற்றியவர் யார்?
- 4வது உதய அரசனால் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தைகளுக்கான சட்டங்கள் மற்றும் விதிகள் யாவை?
- போர்த்துக்கீசிய ஆய்வாளர்கள் எவ்வாண்டு முதன் முதலில் இலங்கைக்கு வந்தனர்?
- முதலாம் புவனேகபாகு மன்னரின் ஆட்சி மையமாக அமையப் பெற்ற பகுதி எங்கிருந்தது?
- மேற்படி வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் விவசாயிகள் ஏன் மன்னரின் ஆட்சியில் மகிழ்ச்சி அடையவில்லை?

வரலாற்று கற்கைகள் தொடர்பான புரிதலை சரிபார்க்க முன்வைக்கப்படும் கேள்விகள் தொடர்பான எடுத்துக்காட்டுகள்:

வரலாற்று கற்கைகள் தொடர்பான புரிதலைச் சரிபார்ப்பதற்காக முன்வைக்கப்படும் பல கேள்விகள் வரலாற்றின் முக்கிய பகுதிகளுக்கு ஏற்ற பதில்களை பெற்றுக்கொடுக்கின்றது.

- யார்...?
- என்ன...?
- எப்போது...?
- எங்கே...?
- ஏன்...?

வரலாற்று கற்றல் செயற்பாடுகளின் போது பாடம் குறித்த மாணவர்களின் புரிதலை சரிபார்க்க ஆசிரியரால் முன்வைக்கப்படும் ஏனைய கேள்விகள் தொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- உங்கள் சொந்த வார்த்தைகளில் குறித்த வரலாற்று நிகழ்வை எப்படி விபரிப்பீர்கள்? (மாணவர்கள் இது தொடர்பில் விளக்கவுரை ஒன்றையோ மற்றும் ஃ அல்லது சுருக்கவுரை ஒன்றையோ பயன்படுத்தி தமது பதில்களை முன்வைக்க வேண்டும்)
- இது தொடர்பான எடுத்துக்காட்டுகளை முன்வைக்க முடியுமா...?
- வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் என்ன நடைபெற்றது ஃ ஏன் அவ்வாறு நடைபெற்றது?

# 2b. பகுப்பாய்வை ஊக்குவிக்க உதவியாக அமையும் கேள்விகள்

வரலாற்று நிகழ்வுகள் தொடர்பிலான காரணங்களையும் விளைவுகளையும் 'பகுப்பாய்வு' செய்யுமாறு மாணவர்களை நாங்கள் கேட்கும் போது, குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகள் மற்றும் விளைவுகளுக்கு இடையிலான நெருக்கமாக தொடர்புகளை அவதானத்துடன் ஆராயவும், அவற்றை மீள்கட்டமைக்கவும் மற்றும் அடையாளம் காணவும் நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். வரலாற்று நிகழ்வுகள் தொடர்பிலான பகுப்பாய்வுகளின் போது எண்ணங்கள், சிக்கல்கள் அல்லது நிகழ்வுகளை அவற்றின் வகை பாகங்களாகப் பிரித்து, பிரிக்கப்பட்ட ஒவ்வொரு

பகுதியின் தன்மையையும் தனித் தனியாக ஆராய்ந்து, அவை அனைத்தும் குறித்த வரலாற்று நிகழ்வுடன் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை கவனமாகப் பரிசீலனை செய்வது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

வரலாற்று கற்கையுடன் தொடர்புடைய பகுப்பாய்வுகளின் போது மாணவர்கள் குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய பல்வேறு வகையான காரணங்களை (நீண்ட, குறுகிய கால காரணங்கள், அடிப்படைக் காரணங்கள், வினையூக்கிகள் போன்றவை) வகைப்படுத்தும் கேள்விகளை முன்வைக்க வேண்டும். அல்லது குறித்த வரலாற்று நிகழ்வின் விளைவாக ஒன்றின் பின் ஒன்றாக நடைபெற்ற பல்வேறு விளைவுகளுக்கு இடையில் காணப்படும் தொடர்புகள் குறித்த ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான பகுப்பாய்வு என்பது ஆதாரங்கள் அல்லது தொல்பொருள் சான்றுகளின் பகுப்பாய்வாக காணப்படுகின்றன. மேலும் இவற்றை ஆதாரமாகக் கொண்டு மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கடந்த காலத்தைப் பற்றிய தீர்க்கமான முடிவுகளை பெற்றுக்கொள்வதற்கும் இந்த வரலாற்று சான்றுகள் எவ்வாறு குறித்த வரலாற்று நிகழ்வுடன் பொருந்துகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இறுதியாக, பகுப்பாய்வு என்பது வெவ்வேறு ஆதாரங்கள், காரணங்கள் அல்லது விளைவுகளை ஒப்பீட்டு ரீதியாகவும் மற்றும் வேறுபடுத்தி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை உள்ளடக்கியதாகவும் அமையும்.

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகளின் பகுப்பாய்வை ஆதரிக்கும் வகையிலான கேள்விகள். அது தொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- இவற்றில் எந்த காரணத்தை நீண்ட கால காரணங்களாக வகைப்படுத்துவீர்கள்? எவற்றை குறுகிய கால காரணங்களாக வகைப்படுத்துவீர்கள்? ஏன் அவை அவ்வாறு கருதப்படுகின்றன ?
- குறித்த வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய விளைவுகளில் எது எதிர்பாராத நிகழ்வாக நடைபெற்றது என நீங்கள் நினைக்கிறீர்கள்? ஏன் அவ்வாறான முடிவுக்கு நீங்கள் வந்தீர்கள்?
- குறித்த வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய இரண்டு ஆதாரங்களும் எதற்காக மோதலுக்கான காரணங்களை மறுக்கும் வகையில் அமைந்துள்ளன.
- வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய தொல்பொருள் சான்றுகளாக விளங்கும் அடிப்டை கல்வெட்டுகளும் உலோகப் பொருட்களும் குறித்த காலத்தின் தொழில்நுட்பத்தை பற்றி எவ்வாறு விளக்குகின்றது.
- ஆசிய பிராந்தியத்தில், ஆரம்பகால பகுதியில் போர்த்துக்கீசியர்களால் மேற்கொள்ளப்பட்ட நாடுகாண் பயணங்கள், பின்நாட்களில் ஏனைய சக்திவாய்ந்த ஐரோப்பிய நாடுகளின் புத்தாய்வுப் பயணங்கள் மற்றும் காலனித்துவத்துக்கு எவ்வாறு பங்களித்தது?

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகள் குறித்த பகுப்பாய்வுக்கு ஆதரவளிக்கும் வகையில், கூடுதல் தூண்டலின்றி பதிலை முன்னிறுத்தி கேட்கப்படும் கேள்விகள். அதுதொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- குறித்த வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணத்தை ஃ விளைவை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? ஏன் அவ்வாறானதொரு வகைப்படுத்தலை மேற்கொண்டீர்கள் ? ( குறிப்பு : குறுகிய கால, நீண்ட கால, நோக்கம், திட்டமிடப்படாத, நேரடி காரணம், மறைமுக காரணம் போன்ற பல்வேறு வகைப்பாடுகளை மாணவர்களுக்கு வழங்குதல் )
- குறித்த வரலாற்று நிகழ்வுகளில் காணப்படும் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் ...?
- குறித்த வரலாற்று நிகழ்வு எப்படி நடைபெற்றது? ... அதற்கு வழிவகுத்தது யார்? ஃ அதற்கு யார் யார் பங்களிப்பு

வழங்கினார்கள்? ஃ குறித்த வரலாற்று நிகழ்வு ஏற்படுத்திய விளைவுகள் ஃ அதனால் ஏற்பட்ட தாக்கம்...?

- இதற்கிடையில் காணப்படும் தொடர்பு யாது?
- குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்பான ஆதாரம் ஏன் அவ்வாறு பரிந்துரையை முன்வைக்கின்றது ?
- குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய வெவ்வேறு ஆதாரங்களில் இருந்து நாம் எவ்வாறான முடிவுகளை எடுக்க முடியும்...?

# 2c. மதிப்பீட்டை ஊக்குவிக்க உதவியாக அமையும் கேள்விகள்

வரலாற்று வகுப்பறையில், காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி மதிப்பீடு செய்யும் பொருட்டு முன்வைக்கப்படும் கேள்விகள், குறித்த வரலாற்று பாடம் தொடர்பான புரிதலை பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுகின்றன.

உதாரணத்திற்கு, கடந்த கால நிகழ்வுகளின் நோக்கம், இலக்குகளின் அடிப்படையாகக் கொண்ட விளைவுகளாக கருதும் பட்சத்தில், அந்நிகழ்வுகளை நேர்மறையாவோ அல்லது எதிர்மறையாகவோ கருதுவதற்கான வாய்ப்பு, வெவ்வேறு குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு எந்த அளவிற்கு விளைவுகள் நேர்மறை அல்லது எதிர்மறையான அமைந்ததா என்பதை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு காரணங்கள் அல்லது விளைவுகளின் முக்கியத்துவத்தை மதிப்பிட முடியும்.

வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான வாதங்களை உருவாக்குவதில் மாணவர்கள் தங்கள் திறமைகளை வலுப்படுத்த இந்தக் கேள்விகள் அவசியமாக கருதப்படுகின்றது. மதிப்பீட்டு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வு தொடர்பான அறிவு, அந்நிகழ்வுடன் தொடர்புடைய நம்பகமான சான்றுகள் மற்றும் தான் முன்வைக்கும் பதில்கள் சரியென்பதற்கான காரணங்கள் மற்றும் நியாயமான தன்மையோடு கூடிய வாதத்துடன் மாணவர்கள் தாம் பெற்றுக்கொண்ட கேள்விக்கான தீர்வுகளை ஆதரிக்க வேண்டும். இந்தக் மதிப்பீடு கேள்விகளில் “பெரும்பாலான”, “குறைந்தபட்சம்”, “எவ்வளவு வெற்றிகரமான”, “எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது”, மற்றும் “எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது” போன்ற சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதை நீங்கள் அவதானிக்க முடியும். ஏனெனில் மதிப்பீட்டு கேள்விகள் நியாயமான மதிப்பீடுகளை மேற்கொள்வது பற்றியதாக அமைகின்றது.

இந்த சொற்கள் மற்றும் சொற்றொடர்களை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தங்கள் முழுமையான கருத்துக்களுடன் குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. முக்கியத்துவம், வெற்றி போன்றவற்றுக்குப் பதிலாக குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய கண்ணோட்டங்களை ஆராய்வதைப் பரிந்துரைக்கின்றோம். உதாரணமாக நாம் தலைவர் ஒருவர் முன்வைத்த கொள்கை குறித்த பதில்களை முன்வைக்கும் போது அக்கொள்கையானது முழுமையாக வெற்றி அடைந்தது அல்லது முற்றிலும் தோல்வி அடைந்தது என்று வெறுமனே கூறுவதற்கு பதிலாக, “எந்த அளவிற்கு” அத்தலைவரின் கொள்கை அமையப்பெற்றது என்ற கேள்விக்கு பதிலளிக்கும் மாணவர்கள், தாம் முன்வைக்கும் பதில்களில் ஊடாக குறித்த அரசியற் கொள்கையில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் மதிப்பிட்டு கருத்துகளை முன்வைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகளின் மதிப்பீட்டை ஆதரிக்கும் வகையிலான கேள்விகள். அதுதொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- சோல்பரி அரசியலமைப்பானது இலங்கை வரலாற்றில் ஏற்படுத்திய மிக முக்கிய விளைவுகள் யாவை?
- துட்டகைமுனு மன்னரின் ஆட்சி காலத்தில் அரசியல் அதிகாரம் எவ்வளவு சிறப்பாக நிறுவப்பட்டது?
- இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கு வழிவகுத்த மிக முக்கியமான காரணிகள் யாவை?
- 1960-65 வரையிலான பண்டாரநாயக்க அரசாங்கம் பின்பற்றிய அரசியற் கொள்கைகளால், எந்தக் குழுக்கள் அதிகம் பாதிக்கப்பட்டன? இந்த அரசியற் கொள்கைகளால் எந்தக் குழுக்கள் குறைவாகப் பாதிக்கப்பட்டன?
- வரலாற்றில் கோட்டே மற்றும் யாழ்ப்பாண இராசதானிகளை போர்த்துக்கேயர் கைப்பற்றுவதற்கு இவ்விரண்டு இராசதானிகளிலும் அப்போது காணப்பட்ட உள்நாட்டு மோதல்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாக அமையப்பெற்றது ?

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகள் குறித்த மதிப்பீடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், கூடுதல் தூண்டலின்றி பதிலை முன்னிறுத்தி கேட்கப்படும் கேள்விகள். அதுதொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- எந்த அளவிற்கு குறித்த வரலாற்று நிகழ்வு முக்கிய காரணமாக அமைந்தது...?
- இந்த வரலாற்று நிகழ்வின் தாக்கம் எத்தகையதாக அமைந்தது?
- எவ்வளவு வெற்றிகரமாக அமையப் பெற்றது...?
- மிக முக்கியமான காரணங்கள் யாவை...?
- குறித்த நிகழ்வுகள் எந்த அளவிற்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது...?

## 2d. கண்ணோட்டங்களை ஆய்வு செய்வதற்கு உதவியாக அமையும் கேள்விகள்

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய பலதரப்பட்ட கண்ணோட்டங்களை ஆய்வு செய்வது வரலாற்று ரீதியான சிந்தனையின் செயற்பாடுகளில் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றது. எனவே நமது கற்பித்தல் செயற்பாடுகளின் போது பதில்களை பெற்றுக்கொள்வதற்கான ஆய்வுகளை எளிதாக்கும் கேள்விகளைச் சேர்ப்பது மிகவும் முக்கியமான விடயமாக பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட வரலாற்றில் காணப்படும் நிகழ்வுகள், அவற்றுடன் தொடர்புபட்ட மக்கள் அல்லது குறித்த வரலாற்று நிகழ்வு இடம்பெற்ற காலப் பகுதிகள் போன்றவை ஆய்வு செய்து குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய மாறுபட்ட கோணங்களைக் கொண்ட கண்ணோட்டங்களை மதிப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளலாம். எவ்வாறாயினும், குறித்த வரலாற்று நிகழ்வு இடம்பெற்ற காலம் தொடக்கம் தற்காலம் வரை காணப்படும் மாறுபட்ட கோணங்களைக் கொண்ட மற்றும் விரிவடையும் தன்மையைக் கொண்ட கண்ணோட்டங்களை மாணவர்கள் ஆய்வு செய்யவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

காரணங்கள் மற்றும் விளைவுகள் மீதான கண்ணோட்டங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு வினவப்படும் கேள்விகள், பல்வேறு கண்ணோட்டங்களைக் அறிந்துகொள்வது மாத்திரமின்றி குறித்த காரணங்கள் மற்றும் விளைவுகளுடன்

தொடர்புடையை அடிப்படைக் காரணங்களைப் பற்றி சிந்திக்கவும் மாணவர்களுக்கு உதவியாக அமைகின்றது. காரணங்கள் மற்றும் விளைவுகள் மீதான கண்ணோட்டங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு வினவப்படும் கேள்விகள் ஒரு நபரின் அல்லது ஒரு குழுவின் அடையாளத்தின் பல அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். அவ்வாறு அமையப் பெரும் போது, குறித்த நபர் அல்லது தரப்பு கொண்டுள்ள மதிப்பு, சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணி, பாலினம், மதம், இனம், அரசியற் கொள்கைகள், வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் பிற காரணிகள் போன்றவை அவர்களின் கண்ணோட்டத்தில் தாக்கத்தைச் செலுத்தும். வெளிப்படையான அல்லது மறைமுகமான கண்ணோட்டங்கள் முன்வைக்கும் ஆதாரங்களை ஆய்வுகளின் போது, அதற்காக முன்வைக்கப்பட்ட கேள்விகளை ஆய்வுகளில் உள்ளடக்குவது மிகவும் முக்கியமானது.

காரணம் மற்றும் விளைவுகள் தொடர்பிலான கண்ணோட்டங்களை ஆய்வு செய்வதை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகள். அது தொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- 1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்ததற்கு முதன்மையான காரணி என்ன என்பதில் இந்த இரண்டு வரலாற்றாசிரியர்களும் ஏன் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர்?
- அகஸ்டஸ் சீசரை ஒரு சிறந்த தலைவராகவும், அவரது ஆட்சிக்காலத்தில் மதிப்புமிக்க நேர்மறையான விளைவுகள் ஏற்பட்டது என்ற கருத்தினை சமூகத்தின் எத்தரப்பினர் கொண்டுள்ளனர்? எச் சமூகத்தில் எந்த தரப்பினர் மேற்குறித் கண்ணோட்டத்துடன் உடன்படவில்லை? அதற்கான காரணம் யாது?
- கிளர்ச்சிக்கான காரணங்கள் தொடர்பில் இந்த மூல ஆவணத்தை எழுதியவர் குறித்த கிளர்ச்சி தொடர்பில் எவ்வகையான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார்? இந்தக் காரணங்களை இந்த ஆசிரியர் ஏன் குறிப்பாகத் தேர்ந்தெடுத்தார்?
- இந்த மூல ஆதாரம் ஃ உரையில் யாருடைய கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன? யாருடைய கருத்துகள் இதில் உள்ளடங்கவில்லை இல்லை?
- காலம் முழுவதும் பிரிட்டிஷ் காலனித்துவம் பற்றிய மக்களின் கருத்துகளில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன?

காரணம் மற்றும் விளைவுகள் தொடர்பிலான கண்ணோட்டங்களை ஆய்வு செய்வதற்கு உதவியாக அமைந்திடும், அத்துடன் கூடுதல் தூண்டலின்றி பதிலை முன்னிறுத்தி கேட்கப்படும் கேள்விகள். அதுதொடர்பான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

- இந்த ஆதாரத்தினை முன்வைக்கும் ஆசிரியரின் கருத்து என்ன...? உங்களுக்கு எப்படி தெரியும்? அவர்கள் ஏன் இப்படி எண்ணுகின்றார்கள்?
- இந்த தலைவர் ஏன் இவ்வாறு ஆசைப்படுகிறார்?
- இதைப் பற்றி சமுதாய மக்கள் என்ன நினைத்திருப்பார்கள்?
- காலப்போக்கில் மக்களின் மனப்பான்மை எவ்வாறு உருவாகியுள்ளது? காலப்போக்கில் மக்களின் கருத்துக்கள் ஏன் மாறுகின்றன?
- வரலாற்றாசிரியர்கள் இதிலிருந்து ஏன் வேறுபடுகிறார்கள்?
- யாருடைய கண்ணோட்டங்கள் இதில் இடம்பெறவில்லை?

# 3.

# வரலாற்று பாடங்களில் கேள்விகளை ஒருங்கிணைப்பதற்கான உத்திகள்



# 3a. தொடக்கச் செயல்பாடு (ஸ்டாடர்ஸ் – Starters)

தொடக்கச் செயல்பாடு (ஸ்டாடர்ஸ்) என்பது மாணவர்கள் வகுப்பறைக்குள் நுழைந்தவுடன் எளிதாகவும் விரைவாகவும் மேற்கொள்ளக் கூடிய நேரடி பாடவிதான செயற்பாடாகும். வகுப்பறையில் மேற்கொள்ளப் போகும் பாடவிடயம் தொடர்பில் மாணவர்களின் மனநிலையை தயார்ப்படுத்துவதற்கு இந்த ஸ்டாடர்ஸ் உதவியாக அமைகின்றது. அனைத்து மாணவர்களும் சிந்திக்கும் வகையிலும், அத்துடன் அனைத்து மாணர்களும் பங்கேற்கும் வகையிலும் குறித்த செயற்பாட்டு அமையவேண்டும். அதேவேளை குறித்த ஸ்டாடர்ஸ் திறந்த செயற்பாடாகவும், வழங்கப்பட்ட துல்லியமான தகவல்களை மாத்திரம் பயன்படுத்தி பதிலளிக்கக் கூடிய செயற்பாடாகவும் அமைய வேண்டும்.

ஒருங்கிணைக்கும் வகையிலான தொடக்கச் செயற்பாடுகள் தொடர்பான எடுத்துக்காட்டுகள்:

- புகைப்படம் ஒன்றை காண்பித்து, குறித்த படம் தொடர்பான பகுப்பாய்வுகளை ஊக்குவிக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை கேட்கலாம்.
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு பதில் எழுதவும்
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளைப் பற்றி சிந்தியுங்கள், மற்றுமொரு மாணவருடன் இணைந்து குறித்த படம் தொடர்பில் விவாதிக்கவும் அதுதொடர்பான கருத்துகளையும் முன்வைக்க பணிக்கலாம்.
- வரலாற்று நிகழ்வொன்றை அடிப்படையாக கொண்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகள் முன்வைத்து, அதனை நாடக பாணியில் விபரிக்கும் வகையிலான செயற்பாட்டை மாணவர்களுக்கு வழங்கலாம்.

# 3b. நிறைவு செயற்பாடு (ப்ளீனரீஸ் – Plenary)

நிறைவு செயல்பாடு (ப்ளீனரீஸ்) என்பது வகுப்பறையில் மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட பாடத்தின் இறுதியில் குறித்த பாடம் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பாடவிதான செயற்பாட்டாகவும், வரலாற்று வகுப்பறையில் மாணவர்கள் தங்கள் கற்றுக்கொள்ளும் பாடம் பற்றி சிந்திக்கவும், அதுதொடர்பான தங்கள் புரிதலை மாணர்கள் தெரிவிப்பதற்காக அமையும் செயற்பாடாகும். அதேவேளை குறித்த பாடத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புடைய கருத்துகளை ஆசிரியர்கள் தெரிவிப்பதற்காகவும் இந்நிறைவு செயற்பாடு அமையலாம். சிறந்த நிறைவு செயற்பாடானது, குறித்த பாடத்தின் நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபடுவதோடு, தாங்கள் கற்றுக்கொண்ட விடயங்கள் குறித்து மாணவர்களை தீவிரமாக சிந்தனை செய்வதற்கு உதவும் வகையில் அமையும். ஒரு பாடத்தின் இடை நடுவிலோ அல்லது பாடத்தின் நிறைவிலோ ப்ளீனரீஸ்களை மேற்கொள்ளலாம். ப்ளீனரிகளை வடிவமைக்கும் போது மாணவர்களின் பல்வேறுபட்ட திறன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவு தொடர்பான கேள்விகளை ஒருங்கிணைக்கும் வகையில் மேற்கொள்ளக் கூடிய நிறைவு செயற்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- கே.டபள்யூ.எல் (KWL) : இந்த பாடவிதான செயற்பாட்டில் மாணவர்கள் தங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவை, எதிர்காலத்தில் அவர்கள் எந்தெந்த விடயங்களை மேலதிகமாக கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள் மற்றும் தாங்கள் கற்றுக்கொண்ட பாடம் தொடர்பாக விவாதிக்கும் வகையிலான பயிற்சி செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளலாம்.

- கேள்விகள் கவனம் (ஜியோபார்டி - Jeopardy): இந்த கற்றல் செயற்பாட்டில் மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவுகளுடன் தொடர்பான கேள்விகளை தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். இது ஒரு வேடிக்கையான கற்றல் செயற்பாடாக அமைந்தாலும், இச்செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட வரலாற்று பாடங்களை உடனுக்கு உடன் மீட்டுப் பார்க்க முடியும். குறிப்புகளுடன் கூடிய கேள்விகளுக்கு மாணவர்கள் பதிலளிக்கும் இந்த கற்றல் செயற்பாடானது, அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை மையமாக கொண்டு அமைவது பொருத்தமாக இருக்கும்.

- ஒற்றை வார்த்தை வரலாறு (கீவேர்ட் - Keyword): கற்றலுடன் தொடர்புடைய இந்த செயற்பாட்டில் மாணவர்களுக்கு வரலாற்று நிகழ்வுக்கான காரணம் அல்லது விளைவை அடையாளப்படுத்தும் வகையில், ஒற்றை வார்த்தையில் குறிப்பு ஒன்றை வழங்கிடுங்கள். மேலும் சம்பந்தப்பட்ட வரலாற்று நிகழ்வு பற்றிய கேள்விக்கு மாணர்கள் ஒற்றைக் குறிப்பினை பயன்படுத்தி பதிலளிக்க ஊக்குவிக்கவும்.

- தலைப்புடன் ஓர் ஆட்டம் (டொபிக் டென்னிஸ்) - Topic tennis): இரண்டு போட்டியாளர்கள் மற்றும் ஒரு நடுவர் என்ற அடிப்படையில் மூவர் அடங்கிய குழுக்களாக வகுப்பறையில் உள்ள மாணர்களை பிரித்துக்கொள்ளவும். குழுவின் நடுவரால் கேள்விகள் முன்வைக்கப்படும். உதாரணமாக "மோதலுக்கான குறுகிய கால காரணங்கள் யாவை?" போன்ற கேள்விகளை நடுவர் கேட்கலாம். குழுவிள் போட்டியாளர்கள் தங்கள் யோசனைகள் தீர்ந்து போகும் வரை குறித்த வரலாற்று நிகழ்வுக்கான காரணங்களை அடையாளம் காண வேண்டும் யார் வெற்றி என்பதை நடுவர் தீர்மானிப்பதாக இக்கற்றல் செயற்பாடு அமையும்.

- பதில் சொல்லி வெளியேறு (எக்சிட் டிக்கட் - Exit ticket): ஒரு வரலாற்று நிகழ்வை மையப்படுத்திய கேள்வி அடங்கிய காகிதத்தை மாணவர்களுக்கு வழங்கலாம். வகுப்பறையை விட்டு வெளியேற விரும்பும் மாணவர்கள், குறித்த வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய கேள்விக்கான பதிலை அளிக்க வேண்டும் என்ற எளிய நிபந்தனையுடன் இந்த கற்றல் செயற்பாட்டை வரலாற்று வகுப்புகளில் முன்னெடுக்கலாம்.

# 3c. கலந்துரையாடல் (Discussion)

வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவு தொடர்பில் கேள்விகளை ஒருங்கிணைப்பது பல்வேறு தலைப்புகளின் கீழ் விவாதங்களை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும். சிறிய அளவிலான குழு உரையாடல்கள் மற்றும் முழு வகுப்புறையும் பங்குபற்றும் வகையிலான விவாதங்கள் என்ற இரண்டு பொதுவான விவாத வடிவங்களை இந்த கற்றல் செயற்பாட்டில் பயன்படுத்த வேண்டும். மாணர்களால் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் அல்லது பாடவிடயம் தொடர்பான கருத்து பகிர்வுகள் போன்றவற்றை ஆசிரியர்கள் பரிசோதித்து பார்க்க முடியும். குறித்த வரலாற்று நிகழ்வுக்கான காரணம் மற்றும் விளைவு குறித்து விபரிக்கும் வகையிலான உரையாடல்களை தூண்டும் வகையிலான சிந்தனைமிக்க கேள்விகளால் விவாதங்கள் தூண்டப்பட வேண்டும். கலந்துரையாடலை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகளுக்கு பதிலளிப்பதான் ஊடாக மாணவர்கள் தங்கள் கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையில் குறித்த வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய நியாயங்களையும் ஆதார ஆதாரங்களையும் முழுமையாக புரிந்துகொண்டார்களா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்று பாட ஆசிரியர்கள் குறித்த வரலாற்றுடன் தொடர்புடைய மேலதிக கேள்விகளை முன்வைக்கலாம். ("அந்த யோசனையை ஆதரிக்க நீங்கள் என்ன ஆதாரங்களைப் பயன்படுத்துவீர்கள்?" போன்ற மேலதிக கேள்விகளுக்கு பதிலளிப்பதன் ஊடாக மாணவர்கள், தாம் முன்வைக்கும் கருத்துகள் அல்லது உரையாடல்களுக்கு மேலதிகமாக வலுசேர்க்க முடியும். மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களை நினைவூட்ட முடியும்.

வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்களை மையப்படுத்தி, அதுதொடர்பான விவாதங்களை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- வெறும் தற்செயலாக இன்றி குறித்த வரலாற்று நிகழ்வுக்கான காரணம் அந்நிகழ்வுடன் தெளிவாக தொடர்பு பட்டுள்ளதா? ஏன் அவ்வாறு தொடர்பு படுத்தப்படுகின்றது? அல்லது ஏன் அவை தொடர்புபடவில்லை?
- ஒரு குறிப்பிட்ட காரணி வரலாற்றில் இருந்து நீக்கப்பட்டிருந்தால், குறித்த வரலாற்று நிகழ்வு இடம்பெற்றிருக்குமா? ஆம் என்றால் அதற்கான நியாமான சான்றுகளுடனும் இல்லையெனில் அதற்கான சான்றுகளுடன் தெளிவுபடுத்தவும்.
- வரலாற்று நிகழ்வொன்று தீவிரம் அடைவதற்கு குறித்த நிகழ்வுக்கான காரணம் எந்த அளவிற்கு பங்களித்தது?
- வரலாற்று நிகழ்வுக்கான காரணமாக அமையப்பெற்ற காரணமொன்று ஏனைய காரணங்களை விட ஏன் முக்கியமானதாக கருதப்படுகின்றது அல்லது முக்கியத்துவம் குறைவாக கருதப்படுகின்றது?
- வரலாற்று நிகழ்வொன்று ஏன் நடைபெற்றது என்பதற்கான மேலதிக விளக்கத்துடன் கூடிய காரணம் உள்ளனவா? அப்படியானால், அவை யாவை? இல்லையென்றால், ஏன் இருக்கக்கூடாது?
- வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய விளைவுகளை மையப்படுத்தி, அதுதொடர்பான விவாதங்களை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:
- வரலாற்று நிகழ்வொன்றின் விளைவுகளாக இடம்பெற்ற குறிப்பிடத்தக்க வரலாற்று சம்பவங்கள் யாவை? குறித்த விளைவுகள் பற்றிய எவ்வாறான புரிதலை நாம் கொண்டுள்ளோம்?
- வரலாற்று நிகழ்வொன்றின் விளைவுகள், குறித்த காலப்பகுதியில் காணப்பட்ட சமூகப் பொருளாதார நிலைகளில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியது? குறித்த விளைவுகளால் பயன் அடைந்த சமூக குழுக்கள்

யாவை? எந்த இனம் அல்லது இனக்குழுக்கள் குறித்த வரலாற்று நிகழ்வின் விளைவுகளால் பாதிப்பை சந்தித்தன? குறித்த விளைவுகள் ஏன் இடம்பெற்றது அல்லது எவ்வாறு இத்தகைய விளைவுகள் ஏற்பட்டன?

- வரலாற்று நிகழ்வின் விளைவுகள் எவ்வளவு தீவிரமானதாக அமைந்தது? வரலாற்று நிகழ்வில் நேரடியாக சம்பந்தப்படாத பிரதேசங்கள் அல்லது நாடுகளில் இவ் வரலாற்று நிகழ்வின் தொடர்ச்சியாக இடம்பெற்ற விளைவுகள் உணரப்பட்டதா? அப்படியானால், எந்தெந்த பகுதியில் குறித்த விளைவுகளை உணரக் கூடியதாக இருந்தது?
- வரலாற்று நிகழ்வின் தொடர்ச்சியாக இடம்பெற்ற அதன் விளைவுகள் எவ்வளவு காலம் நீடித்தது?

# 3d. எழுத்து மூலமான பயிற்சி செயற்பாடுகள் (Written Tasks)

வரலாற்று நிகழ்வுக்கான காரணம் மற்றும் விளைவுகளுடன் தொடர்புடைய கேள்விகளை ஒருங்கிணைக்க எழுத்து மூலமாக மேற்கொள்ளப்படும் பயிற்சி செயற்பாடாகும். எழுத்து மூலமான பயிற்சி செயற்பாடுகள், வரலாற்று நிகழ்வு குறித்த விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில் ஒற்றைக் கேள்வியாகவோ (கட்டுரையொன்றை வரைவதற்கு வழிவகுக்கும்) அல்லது தொகுக்கப்பட்ட கேள்விகளாகவோ (பயிற்சிகான தொகுப்பை உருவாக்கும்) இருக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி மாணவர்களை வழிநடத்தும் வகையிலான பல்வேறு எழுத்து மூலமான கற்றல் செயற்பாடுகளை வரலாற்று பாட ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படலாம். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய காரணங்களை உள்ளடக்கிய ஒரு அலகொன்றில் குறுகிய கால காரணங்களைக் கண்டறிவதில் தொடங்கி, இடைக்கால காரணங்களுக்குச் சென்று, இறுதியில் நீண்ட கால காரணங்களை அறிந்துகொள்ளும் வகையிலான கேள்விகளை ஆசிரியர்கள் உருவாக்க முடியும். வரலாற்று நிகழ்வுக்கான காரணங்களின் தொகுப்பைக் நாம் அறிந்துகொள்ளும் போது அடுத்த கட்ட கேள்விகளின் தொகுப்பை நாம் அடையாளங் காண முடியும். எனவே குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் மாணவர்கள், ஒரே நேரத்தில் அனைத்து கேள்விகளின் மீது அவதானம் செலுத்த முடியாத நிலை காணப்படும். கேள்விகளின் ஒவ்வொரு தொகுப்பின் போதும், மாணவர்கள் எழுத்து மூலமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு, வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய சில ஆதாரங்களைப் கற்றறிந்து கொள்ளவும், ஏனைய மாணவர்களுடன் அது தொடர்பான விவாதத்தை மேற்கொள்ளவும் ஊக்குவிக்கலாம்.

பகுதியில் விவாதத்தின் மேலே விவரிக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் எழுதப்பட்ட பணிகள் இருக்கலாம். வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்கள் அல்லது விளைவுகளை மாணவர்கள் பகுப்பாய்வு செய்து, மதிப்பீடு செய்ய வேண்டிய கடினமான கேள்விகளுக்குச் செல்வதற்கு முன், மாணவர்கள் முக்கியக் கருத்துகளைப் புரிந்துகொண்டிருப்பதை உறுதிசெய்ய, ஆசிரியர்கள் பணித்தாள்கள் அல்லது பிற பல-கேள்வி செயல்பாடுகளை கேள்விகளுடன் தொடங்க விரும்பலாம். மாணவர்களின் பகுப்பாய்வு மற்றும் சூழ்நிலையின் காரணங்கள் அல்லது விளைவுகளை மதிப்பிடுவதற்கு உதவுவதற்கு சாத்தியமான காரணங்கள் அல்லது விளைவுகளின் பட்டியலை மாணவர்களுக்கு வழங்குவது உதவியாக இருக்கும். எழுதப்பட்ட பணிகளில் விவாதக் கேள்விகளை முன்வைப்பதன் மூலம் அல்லது சாத்தியமான காரணங்கள் மற்றும் விளைவுகளைப் பற்றி பேசுவதற்கு வகுப்பை குழுக்களாக பிரிப்பதன் மூலம் இது நிறைவேற்றப்படலாம்.

# 3e. வரலாற்று பாடத்துடன் தொடர்புடைய முறைசாரா மற்றும் முறைசார் மதிப்பீடுகள் (Formative & summative assessments)

கற்றல் செயல்பாட்டின் போது, மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியரினால் முன்வைக்கப்படும் கருத்துகள் முறைசாரா மதிப்பீடாக கருதப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு உருவாக்கும் மதிப்பீடுகள் வழங்குகின்றன. இவ்வாறாக உருவாக்கப்படும் முறைசாரா மதிப்பீடுகள் பொதுவாக குறைந்தபட்ச விளைவுகளைக் கொண்டிருப்பதோடு முறையான எழுத்துபூர்வ தரநிலை அல்லது மதிப்பெண் போன்ற மதிப்பீட்டு அம்சங்களை இவ்வகையான மதிப்பீடு வெளிப்படுத்தாது.

வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படும் உரையாடல்கள், எழுத்தபூர்வமாக முன்னெடுக்கப்படும் சுருக்க வடிவில் அமையப் பெற்ற கற்றல் செயற்பாடுகள், வீட்டுப்பாட செயற்பாடுகள், விரைவான

வினா-விடை செயற்பாடு மற்றும் ஆய்வுகள் போன்ற செயற்பாடுகள் முறைசாரா மதிப்பீடுக்கான உதாரணங்கள் ஆகும். முறைசார் மதிப்பீடுகள் என்பது மதிப்பீடு அம்சங்களை வெளிப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் கற்றல் மதிப்பீட்டு செயற்பாடுகள் (கணிப்பீட்டு பரீட்சைகள், பாடத்துடன் தொடர்புடைய செயல்திட்ட பணிகள் அல்லது பொது தேர்வுகள்) ஆகும். பரீட்சை மதிப்பெண் திட்டம் அல்லது வேறு சில முறையான தரநிலை அல்லது அளவுகோலின் கீழ் தரப்படுத்தப்படுத்தும் பொருட்டு இவ்வகையான முறைசார் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. தவணைப் பரீட்சைகள், இறுதித் தேர்வுகள், தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் மற்றும் கல்வி சார் இறுதித் செயற்திட்ட பணிகள் (ீசழதநஉவள) அல்லது கல்விசார் விளக்கக்காட்சிகள் எடுத்துரைப்புகள் (ீசநளநவெயவழைளெ) முறைசார் மதிப்பீடுகளுக்கான உதாரணங்களாகும். இந்த இரண்டு வகையான மதிப்பீடுகளும் தெளிவான செயல்திறன் தரநிலைகளை கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். அத்துடன் இவ்வாறான மதிப்பீடு நடவடிக்கைகளின் ஊடாக கற்றல் தொடர்பான பிரதிபலிப்பை மாணவர்களிடத்தில் தூண்டும் வகையில் அமைய வேண்டும். அதுமட்டுமல்லாது, குறித்த கற்றல் தொடர்பில் மாணவர்கள் தங்கள் கருத்துக்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பையும் இந்த மதிப்பீட்டு செயற்பாடுகள் வழங்கிடும்.

வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகளின் கருத்துகளை ஒருங்கிணைப்பதற்கான கேள்விகளுக்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- பல் தேர்வு வினாக்கள்: இவ்வகையான வினாக்கள் வெவ்வேறு வழிமுறைகளைக் கொண்டாக அமைந்திருப்பதோடு, இவை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு உதவியாக அமைகின்றது.

இவ்வினாக்கள் தொடர்பான உதாரணங்கள் பின்வருமாறு:

- குறிப்பிட்ட விடயங்ள் தவிர...பின்வரும் அனைத்து காரணங்களும் பொருந்தும்
- பின்வருவனவற்றில்...குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுக்கு வினையூக்கியாக எவ்விடயம் அமைந்தது?
- பின்வருவனவற்றில் எவற்றை...குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வின் விளைவாக கருத முடியாது?
- பின்வருபவை அனைத்தும்...குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வின் நீண்ட கால விளைவுகளாகும்

● சுருக்கமான வினா-விடை பரீட்சை: இவ்கையான மதிப்பீட்டு செயற்பாடுகள், வரலாற்று பாடத்துடன் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அதுதொடர்பான நியாயப்பாட்டை முன்வைக்கவும் அதே வேளை, வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணங்களையும் விளைவுகளையும் எளிதாக அடையாளங் கண்டுகொள்ளும் வாய்ப்பையும் மாணவர்களுக்கு வழங்குகிறது. சுருக்கமான வினா-விடை பரீட்சைகள் பல்வேறு வகையாக அமையக் கூடும். இவ்வகையான மதிப்பீட்டு செயற்பாடுகள் வரலாற்று பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ளும் தன்மையை சரிபார்ப்பதோடு அதுதொடர்பிலான பகுப்பாய்வை மேற்கொள்வதற்கான ஊக்கத்தையும் மாணவர்களுக்கு வழங்குகின்றது. அத்தோடு விரைவான மதிப்பாய்விற்கு ஏதுவாக அமைகின்றன (இதனுடன் தொடர்புடைய கேள்வி மாதிரிகளுக்கு பிரிவு 2 ஐ பார்க்கவும்). சுருக்கமான வினா-விடை பரீட்சையில் முன்வைக்கப்படும் கேள்விகள் ஒரு தூண்டுதலில் பதிலளிக்கும் வகையில் அமைய வேண்டும். குறிப்பாக (முதன்மை ஆதாரம் அல்லது வரலாற்றாசிரியரின் மேற்கோள் போன்றவை நினைவுபடுத்தும் துண்டல்களாக அமையவேண்டும்) அல்லது அவர்கள் தங்கள் சொந்த அறிவைப் பயன்படுத்தி பதிலளிக்குமாறு கேட்கலாம்.

இது தொடர்பான உதாரணங்கள் பின்வருமாறு:

- மெசோலிதிக் வேட்டைக்காரர்கள் இலங்கையை ஆக்கிரமித்துள்ளனர் என்ற கருத்தை எந்த ஆதாரம் ஆதரிக்கிறது?
- இலங்கையில் டச்சுக் குடியேற்றத்தினால் ஏற்பட்ட சில குறுகிய கால விளைவுகள் யாவை?
- காலனித்துவ காலத்தில் ஆங்கிலேயர்கள் சாதாரண இலங்கையர்களின் வாழ்க்கையை எவ்வாறு கட்டுப்படுத்தினார்கள்?

● கட்டுரை வடிவிலான பதில்களை துண்டும் வினாக்கள்: இவ்வகையான வினாக்கள், வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய காரணங்களையும் விளைவுகளையும் மாணவர்கள் ஆழமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்ய அனுமதிக்கும். கட்டுரை வடிவ கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது வெறுமனே வரலாற்று நிகழ்வுகளை விவரிக்க வேண்டியதில்லை, ஒரு சிறந்த கட்டுரை வடிவ கேள்விக்கு மாணவர்கள் வெவ்வேறு தரப்புகளின் வாதங்களை (உடன்பாட்டு அம்சங்கள் மற்றும் எதிர்ப்பு அம்சங்களை குறிப்பிட்டு) சமநிலைப்படுத்த வேண்டும்.

குறித்த வினாக்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

- முடியாட்சி இலங்கையில் சமூக உறவுகளை எந்தளவுக்கு பாதித்தது?
- காலனித்துவ ஆட்சி இலங்கையில் சமூக உறவுகளை எந்த அளவிற்கு பாதித்தது?

# 3f. வகையீட்டல் (வரையறை விளக்கம் – Differentiation)

வகையீட்டல் என்பது ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் செயற்பாடுகளை திருத்தியமைக்கும் செயல்முறையாகும். கற்றல் செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் கற்றுக் கொண்ட விடயங்களை வெளிப்படுத்துவது போன்ற விடயத்தில், மாணவர்கள் தாங்கள் விருப்பத்துக்கு அமைவான தெரிவுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வகையீட்டல் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.
ஒரு குறிப்பிட்ட வகுப்பொன்றில் கற்பிக்கப்படும் பாடத்துக்கான உள்ளடக்கம், கற்பித்தலுடன் தொடர்புபட்ட அறிவுறுத்தல்கள், செயல்முறைகள் அல்லது குறித்த கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழல் போன்றவற்றை குறித்த பாடத்துடன் தொடர்புடைய ஆசிரியர்களால் வகையீட்டலுக்கு உட்படுத்தப்படலாம். வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவுகளின் வேறுபாட்டைப் பயன்படுத்தி, ஆசிரியர்கள் குறித்த காரணம் மற்றும் விளைவுகள் தொடர்பான கேள்விகளை ஒருங்கிணைக்கும் போது ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் திறன்களை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

வரலாற்று நிகழ்வுகளுக்கான காரணம் மற்றும் விளைவுகளுடன் தொடர்புடைய கேள்விகளை ஒருங்கிணைக்க உதவியாக அமையும் வகையீட்டல் செயன்முறைக்கான உத்திகள் குறித்த உதாரணங்கள் பின்வருமாறு:

- தனிப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதிலிருந்து மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை தொடங்குங்கள்: அதாவது அவர்கள் சமீபத்திய தேர்வில் அல்லது விளையாட்டு நிகழ்வில் எவ்வாறு செயலாற்றினார்கள்?, அதற்கான காரணங்கள் (அவர்கள் விடாமுயற்சியுடன் படித்தார்களா அல்லது பயிற்சி செய்தார்களா, அன்றைய தினம் அவர்கள் உணர்ச்சிவசப்பட்ட விதம் போன்றவை) மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகளின் (எதிர்காலத்தில் எப்படி படிப்பார்கள் அல்லது பயிற்சி செய்வார்கள், என்ன புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள்) வெளிபாடுகளை மையப்படுத்திய கேள்விகளை முன்வைக்கலாம்.

- பாய்வு விளக்கப்படங்கள் அல்லது மனக்காட்சி வரைபடங்கள் அல்லது வலைதள தகவல்களைப் பயன்படுத்தவும்: பல்வேறு வகையான காரணங்கள் மற்றும் விளைவுகளுக்கு இடையிலான வகையீட்டல் செயற்பாடுகளின் போது நிறங்களின் வரம்பைப் பயன்படுத்தி மாணவர்களை குழுக்களாக வடிவமைக்க வேண்டும். அம்புக்குறிகள், முக்கிய வார்த்தைகள் மற்றும் படங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் காரணங்களையும் விளைவுகளையும் கற்பனை செய்ய இந்தக் கருவிகள் உதவக்கூடும்.

- வெவ்வேறு திறமைகளைக் கொண்ட குழுக்கள்: உரையாடல்கள் அல்லது எழுத்து மூலமான செயற்பாடுகளுக்காக மாணவர்களின் திறன்களை அடையாளங் கண்டு, பல்வேறு திறன்களைக் கொண்ட குழுக்களாக வகைப்படுத்தலாம். இதன்மூலம் அவர்கள் தங்கள் குழுக்களுக்கு உள்ளேயே தகவல் மற்றும் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளலாம்.

- வீட்டுப்பாடம் அல்லது வகுப்பறையில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பங்குகொள்ளும் மாணவர்கள் பதிலளிக்கும் வகையிலான கேள்விகளை ஆசிரியர்கள் முன்வைக்கும் போது, அவற்றில் சில கேள்விகள் அனைத்து மாணவர்களும் பதிலளிக்க வேண்டிய முக்கியமான கேள்விகளாக ஆசிரியரால் அடையாளம் காண முடியும். பெரும்பான்மையான கற்றவர்கள் பதிலளிக்க வேண்டிய கூடுதல் கேள்விகளை மாணவர்களிடத்தில் முன்வைக்கலாம். இறுதியாக, பெரும்பாலான மாணவர்கள் முடிக்க வேண்டிய கூடுதல் கேள்விகளுக்கு மேலதிகமாக, தங்களை சவால் நிலைக்கு உட்படுத்துவதில் ஆர்வம் காண்பிக்கும் மாணவர்களிடத்தில் பதிலளிப்பதற்கு கடினமான கேள்விகள் மற்றும் கட்டுப்பாடற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

- கேள்வி தயாரிப்புக்கான மாணவர் தேர்வு: ஒரு கேள்விக்கான பதில் ஒரு குறிப்பிட்ட வகையாக இருக்க வேண்டியதில்லை. மாணவர் தங்கள் சொந்த அறிவைப்படுத்தி கேள்விகளை தேர்வு செய்யலாம். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒரு “பெரிய” கேள்வியை வழங்கலாம் (உதாரணமாக “மிக முக்கியமான காரணம் என்ன...?”) மேலும் மாணவர்கள் தங்கள் பதிலை எவ்வாறு வழங்கலாம் என்பது தொடர்பான விருப்பத் தெரிவுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை மாணவர்களுக்கு வழங்கலாம்: சுருக்க வடிவிலான கட்டுரை, வரைபடம் அல்லது காட்சி விளக்கவுரைகள், ஒரு வாய்வழி விளக்கவுரை அல்லது குறும்படம் அல்லது ஒரு சுவரொட்டி போன்றவற்றில் தான் விரும்பும் செயல்முறையை மாணவர்கள் தேர்ந்தெடுக்கலாம். அத்துடன் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் தயாரிப்பு வகையைப் பொருட்படுத்தாமல் தெளிவான தரநிலைகளை உருவாக்கி அவற்றை ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில், (உதாரணமாக, பதில் வெவ்வேறு காரணங்களை தெளிவாக ஒப்பிட்டு, ஒட்டுமொத்த பதிலை ஆதரிக்கும் காரணங்கள் மற்றும் அதற்கான ஆதாரங்களை போன்றவற்றை வழங்கிடும் வகையில்) இது ஒரு பயனுள்ள மதிப்பீட்டு பணியாக அமைகின்றது.

# 4.

# நடைபெற்ற நிகழ்வுகளின் அழப்படையிலான உதாரணங்கள் (Worked Examples)



இலங்கை வகுப்பறைகளில் காரணம் மற்றும் விளைவு பற்றிய கேள்வி எவ்வாறு ஒருங்கிணைக்கப்படலாம் என்பதை மேலும் விளக்குவதற்கு, வரலாற்றுப் பாடத்திட்டத்துடன் இணைக்கப்பட்ட தேசிய பாடப்புத்தகங்களில் நான்கு அத்தியாயங்களில் உள்ளடக்கப்பட்ட இரண்டு தலைப்புகளுடன் தொடர்புபட்ட உதாரணங்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

தலைப்பு 1 என்பது மறுமலர்ச்சி குறித்த வரலாற்று பாடமாகும், இது 8ம் ஆண்டு மாணவர்களுக்கான வரலாற்று பாடப்புத்தகத்தின் அத்தியாயமான "ஐரோப்பாவின் மறுமலர்ச்சி" மற்றும் 10ம் ஆண்டு வரலாற்று பாடப்புத்தகத்தின் அத்தியாயமான "மறுமலர்ச்சி" ஆகியவற்றை உதாரணமாக முன்வைத்துள்ளோம். தலைப்பு 2 ஐரோப்பிய கண்டுபிடிப்பு மற்றும் இலங்கையுடனான அதன் தொடர்பை மையமாகக் கொண்டுள்ளது, 8 மற்றும் 10ம் ஆண்டுகளில் "கிழக்கில் ஐரோப்பியர்களின் ஆய்வுகள் மற்றும் வருகை" மற்றும் "இலங்கை மற்றும் மேற்கு உலகம்" என்ற தலைப்பில் அத்தியாயங்கள் உள்ளன. ஒப்பிடக்கூடிய தகவல்களுடன் கூடிய ஒரே மாதிரியான உள்ளடக்கம் கொண்ட பகுதிகளை தேர்ந்தெடுத்துள்ளோம், ஆனால் வெவ்வேறு வயதினருக்கு கேள்வி கேட்பது எப்படி இருக்கும் என்பதை விளக்கும் வகையில் வெவ்வேறு வயது நிலைகளை இலக்காகக் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு தலைப்புக்கும் ஒரு சுருக்கமான விளக்கத்தையும், மாணவர்களுக்கு விளக்கப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க சொற்களின் பட்டியலையும் வழங்குகிறது. பின்னர், 8 மற்றும் 10 ஆண்டு பாட புத்தகத்தில் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தனித்தனியான வழிகாட்டுதல்கள் மற்றும் மாதிரி கேள்விகளை வழங்கியுள்ளோம்.

பல இலங்கை ஆசிரியர்களால் நிறுவப்பட்ட பாடப்புத்தகங்களை மாத்திரம் அடிப்படையாக கொண்டு பணிபுரியும் நிலையில் உள்ளனர் என்பதைப் புரிந்துகொண்டு, ஒவ்வொரு உதாரணத்திலும் மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு வகையான கேள்விகளை உள்ளடக்கியுள்ளோம். அவை பாடங்களை மையமாகக் கொண்ட பாடங்களுடன் தொடர்புடைய காரணம் மற்றும் விளைவுகள் பற்றிய மேலும் விமர்சன ரீதியான சிந்தனையை மேம்படுத்த பயனுள்ளதாக அமையும்.

இணையதளங்கள், காப்பகங்கள் போன்றவற்றின் மூலம் கூடுதல் சான்றுகளை மாணவர்கள் அணுக உதவும் அதே வேளையில் பிற சான்றுகளை கண்டறிந்து அவற்றை கற்றலுக்கு பயன்படுத்தக்கூடிய பரிந்துரைகளையும் கூடுதல் உதாரணங்களை இங்கு நாம் வழங்கியுள்ளோம்.

# 4a. தலைப்பு 1: மறுமலர்ச்சி

## i. கண்ணோட்டம்

8 மற்றும் 10ம் தர மாணவர்களுக்கான வரலாற்று பாடப்புத்தகங்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சி தொடர்பான வரலாற்று ஆய்வைகளை உள்ளடக்கியுள்ளன. இது 14 மற்றும் 16ம் நூற்றாண்டுகளுக்கு இடையில் ஐரோப்பாவில் கலாச்சார மற்றும் அறிவுசார் புரட்சி உருவாக்கம் பெற்றது. கலை, கட்டிடக்கலை, அறிவியல், மருத்துவம் மற்றும் மதம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களால் மறுமலர்ச்சி வகைப்படுத்தப்படுகிறது. இத்தாலி முதன்மை மையமாக இருக்கும்போது, இந்த மறுமலர்ச்சி தொடர்பான வரலாற்று சகாப்தத்தில் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்தில் போன்ற ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சி நிகழ்வுகளை மாத்திரமே இந்த வரலாற்று பாடப்புத்தகங்களில் உள்வாங்கப்பட்டது. கூடுதலாக, பாடப்புத்தகங்கள் மறுமலர்ச்சியால் பாதிக்கப்பட்ட மற்றும் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு பிரதான பங்காற்றிய வட ஐரோப்பிய நாடுகளுக்கு இந்த பாடப்புத்தகத்தில் இடம்பெறவில்லை. சீர்திருத்தம் மற்றும் மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்களாக இருந்தாலும், வரலாற்று பாடப்புத்தகங்களில் இவ்விரு

தலைப்புகளும் தனித்தனியாக விவாதிக்கப்படுவதை நாம் அவதானிக்க முடிகின்றது. வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் மறுமலர்ச்சியின் கண்ணோட்டத்தை வழங்குவதோடு, இந்த வரலாற்று சகாப்தத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்களை எடுத்துரைக்கின்றது. இருப்பினும், மறுமலர்ச்சியின் தோற்றத்திற்கான குறிப்பிட்ட காரணங்களை ஆய்வு செய்யும் வகையிலாக பாடவிடயங்கள், இந்த வரலாற்று பாடபுத்தகங்களின் இடம்பெறவில்லை.

ஐரோப்பிய மறுமலர்ச்சி பொதுவாக 14ம் நூற்றாண்டு இத்தாலியில் ஆரம்பிக்கப்பட்டு 15 மற்றும் 16ம் நூற்றாண்டு முழுவதும் மற்ற நாடுகளுக்கு பரவியது. பாடப்புத்தகங்கள் மறுமலர்ச்சியின் எழுச்சிக்கு வழிவகுத்த பல்வேறு காரணிகளை உன்னிப்பாக ஆராய்கின்றன. அத்துடன் இந்த வரலாற்று சகாப்தத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எடுத்துக்காட்டும் வகையில் இந்த பாடப்புத்தகங்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சி தொடர்பான தெளிவுபாட்டை வழங்குவதற்கு பாடப்புத்தகங்களில் இரண்டு அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய வரலாற்றில் இந்த முக்கியமான காலகட்டத்தைப் பற்றிய விரிவான அறிவை மாணவர்களுக்கு வழங்குகிறது.
ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலகட்டமான மறுமலர்ச்சி, 14ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றியதாகவும், படிப்படியாக 15 மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் மற்ற நாடுகளுக்கும் பரவியதாகவும் கூறப்படுகிறது. கலாச்சார, கலை மற்றும் அறிவியல் வளர்ச்சியின் இக் காலகட்டத்திற்கு காரணமான பல்வேறு காரணிகளின் ஆழமான பகுப்பாய்வு பாடப்புத்தகங்களில் காணலாம். இப் புத்தகங்கள் இச் சகாப்தத்தில் நடந்த முக்கிய முன்னேற்றங்களை உன்னிப்பாக ஆவணப்படுத்துகின்றன, வரலாற்றில் இம் முக்கிய நேரத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதை உறுதிசெய்ய இரண்டு அத்தியாயங்களை ஒதுக்குகின்றன, இது ஐரோப்பிய வரலாற்றில் இம் முக்கியமான நேரத்தைப் பற்றிய விரிவான அறிவைப் பெற மாணவர்களுக்கு உதவுகிறது.

மறுமலர்ச்சியின் தலைப்பைப் பற்றி எஞ்சியிருக்கும் சில முக்கிய வரலாற்று கேள்விகள் மற்றும் விவாதங்களைப் பற்றி ஆசிரியர்கள் அறிந்திருப்பது உதவியாக இருக்கும். குறிப்பாக, பல அறிஞர்கள் ஒரு அசிரியராக மறுமலர்ச்சி காலத்தைச் சுற்றியுள்ள விவாதங்கள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பான ஆராய்வுகளை கற்றல் செயற்பாடுகளில் உள்ளடக்க வேண்டியது முக்கியமானதாகும். “மறுமலர்ச்சி” என்ற சொல் உண்மையிலேயே இருந்ததா அல்லது பிற்கால வரலாற்றாசிரியர்களால் சுதந்திரமாக நிற்கக்கூடிய பல்வேறு இயக்கங்கள் மற்றும் முன்னேற்றங்கள் மீது திணிக்கப்பட்டதா என்று அறிஞர்கள் நீண்ட காலமாக கேள்வி எழுப்பியுள்ளனர். “இத்தாலிய மறுமலர்ச்சி” போன்ற பல மறுமலர்ச்சிகளின் யோசனை பல்வேறு துறைகளிலும் ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் இந்த இயக்கங்களுக்கு இடையேயான ஆழமான தொடர்புகளை புறக்கணிக்கிறது என்று சில நிபுணர்கள் வாதிடுகின்றனர். உண்மையில், சில வரலாற்றாசிரியர்கள் ஐரோப்பாவிற்கு அப்பால் மறுமலர்ச்சி பற்றிய யோசனையை ஆராய்வதை வழக்கமாக வைத்திருக்க வேண்டும் குறித்த காலகட்டத்தில் உலகின் பிற பகுதிகளில் ஒப்பிடக்கூடிய கலாச்சார மற்றும் அறிவுசார் மேம்பாட்டு குறித்து அவாதானம் செலுத்த வேண்டும்.

மேலும், ஐரோப்பாவில் மறுமலர்ச்சி காலத்தின் சரியான தொடக்கமும் முடிவும் வரலாற்றாசிரியர்களால் ஒப்புக் கொள்ளப்படவில்லை, பல்வேறு ஆதாரங்களில் இருந்து வரலாற்றுப் படைப்புகள் மற்றும் பாடப்புத்தகங்களில் வெவ்வேறு திகதிகளை மேற்கோள் காட்டி, சில அறிஞர்கள் மறுமலர்ச்சி இத்தாலியில் 14ம் நூற்றாண்டில் தொடங்கி 17ம் நூற்றாண்டில் முடிவடைந்தது என்று வாதத்தை முன்வைக்கின்றார்கள். மேலும் சில வரலாற்று அறிஞர்கள் குறித்த காலத்துக்கு முன்னதாக 12ம் நூற்றாண்டில் ஆரம்பமாதாக கூறுகின்றனர். முடிவடைந்ததாகக் கூறுகின்றனர். இறுதியில், மறுமலர்ச்சி காலத்தைச் சுற்றியுள்ள விவாதங்கள் மற்றும் அதன் ஆய்வுகளை மறுமலர்ச்சி சகாப்தத்தின் சிக்கலான மற்றும் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன மற்றும் தொடர்ச்சியான ஆய்வு மற்றும் பகுப்பாய்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

## ii. முக்கிய விதிமுறைகள் (Key Terms ):

மனிதநேயம்: மனித நிலைமையை நன்கு புரிந்துகொள்வதற்காகவும், நீதியானஃநெறி சார்ந்த வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதிலும் கவனம் செலுத்தும் வகையில் உருவான ஓர் அறிவுசார் இயக்கம். இந்த இயக்கம் கல்வி, இலக்கியம், கலை மற்றும் இவற்றை அடைவதற்கான வழிகளாக மனித அனுபவங்களின் மீது கவனம் செலுத்தியது.

இடைக்கால சகாப்தம்: 5ம் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கு பின்னரான சுமார் 1000 ஆண்டுகள் இடைக்கால சகாப்தம் என பொதுவாகக் குறிப்பிடப்படும். இக் காலகட்டம் செழிப்பான கிரேக்க-ரோமானிய நாகரிகத்தின் முடிவைக் குறித்தது என்பது பலரது கருத்து என்றாலும், சில வரலாற்றாசிரியர்கள் இப்போது இக் கருத்துக்கு மேலதிகமாக இக் காலகட்டத்தில்தான் குறிப்பிடத்தக்க கலாச்சார மற்றும் புதுமையான முன்னேற்றங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர்.

நிதி ஆதரவு வழங்கல்: கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு அவர்களின் படைப்புகளை ஊக்குவித்து நிதி உதவிகளும் வழங்கப்பட்டது.

சீர்திருத்தங்கள்: இக் காலப்பகுதியில் நிகழ்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க வரலாற்று வளர்ச்சி சீர்திருத்தங்கள் ஆகும், இது புரட்டஸ்டன்ட் சீர்திருத்த இயக்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இயக்கம் வடக்கு ஐரோப்பாவில் கத்தோலிக்க திருச்சபையை இலக்காகக் கொண்ட சீர்திருத்த இயக்கமாகத் தொடங்கியது, இறுதியில் புரட்டஸ்டன்ட் தேவாலயத்தை உருவாக்கியது.

மறுமலர்ச்சி: பிரெஞ்சு மொழியிலிருந்து "மறுபிறப்பு" என்று நேரடி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. பாடப்புத்தகம் குறிப்பிடுவது போல, இச் சொல் பொதுவாக கிரேக்க-ரோமானிய நாகரீகத்தின் மீதான ஆர்வத்தின் மறுமலர்ச்சியைக் குறிக்கிறது.

## iii. **எடுத்துக்காட்டுகள் 1 : 8ம் ஆண்டு வரலாற்று பாட புத்தகத்தில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி பற்றி வரலாற்று கல்வி**

பற்றிய ஆண்டு 8 நிகழ்ச்சியின் அத்தியாயத்தில், மாணவர்கள் பெரும் கலாச்சார முன்னேற்றத்தி

ஐரோப்பாவில் மறுமலர்ச்சி பற்றிய ஆண்டு 8 நிகழ்ச்சியின் அத்தியாயத்தில், மாணவர்கள் பெரும் கலாச்சார முன்னேற்றத்தின் இந்த காலகட்டத்தின் வரலாற்று சூழல், காரணிகள் மற்றும் விளைவுகளை ஆராய்வார்கள். அத்தியாயம் கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் உட்பட பல்வேறு தலைப்புகளில் ஆராய்கிறது. மறுமலர்ச்சியின் காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்வதன் மூலம், மாணவர்கள் தங்கள் விமர்சன சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்வார்கள். வரலாற்றை புரிந்துகொள்வதற்கு உதவிடும் வகையில் வரலாற்றுபாடத்தில் மாணவர்கள் தங்கள் புரிதலை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய பல கேள்விகளை முன்வைக்கிறது.

**இந்த அத்தியாயத்தில் பயன்படுத்தப்படும், காரணம் மற்றும் விளைவுகளுடன் தொடர்புடைய கேள்விகளுக்கான எடுத்துக்காட்டுகள்**

இந்த பயிற்சியானது வரலாற்று நிகழ்வுகள் மற்றும் உலகில் அவற்றின் தாக்கம் பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்க மாணவர்களை அனுமதிக்கிறது. பாடப்புத்தகத்தை மட்டும் பயன்படுத்தும் ஆசிரியர்களுக்கு, மேலே விவாதிக்கப்பட்ட கேள்விகளின் மூலம் காரணம் மற்றும் விளைவு பற்றிய விமர்சன சிந்தனையை அறிமுகப்படுத்துவதற்கு இந்த அத்தியாயம் மதிப்புமிக்க ஆதாரத்தை வழங்குகிறது.

### *a)* வரலாற்று பாடம் தொடர்பில் புரிதல் உணர்வை அதிகரிக்க உதவிடும் கேள்விகள்:

- கான்ஸ்டான்டினோப்பிளைக் கைப்பற்றியது ஏன் ஐரோப்பாவில் கிரேக்க-ரோமானிய நாகரிகத்தின் மீது ஒரு புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியது?
- பக்கம் 55ல் உள்ள அட்டவணையைப் பயன்படுத்தி, கலை மற்றும் கைவினைத் தொழில்களில் மறுமலர்ச்சியின் தாக்கங்களை எவ்வாறு விவரிப்பீர்கள்?
- கலை மட்டுமல்லாமல் ஐரோப்பாவில் மறுமலர்ச்சியால் பாதிக்கப்பட்ட வேறு முக்கிய களங்கள் யாவை?

### *b)* பகுப்பாய்வை ஊக்குவிக்கும் கேள்விகள்:

- இத்தாலிய நகரங்களில் ஒரு பணக்கார வர்க்கத்தின் தோற்றம் கலைகளில் மாற்றங்களுக்கு வழிவகுத்தது எப்படி?
- பல்கலைக்கழகங்கள் தோன்றியதை மறுமலர்ச்சிக்கான நீண்ட கால அல்லது குறுகிய கால காரணம் என்று வகைப்படுத்துவீர்களா? ஏன்?
- 60 - 62 பக்கங்களில் வானியல் மற்றும் மருத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பற்றி படிக்கவும். மறுமலர்ச்சி காலத்தின் புதுமைகள் எவ்வாறு இந்தத் துறைகளில் நீண்டகால மாற்றங்களுக்கு வழிவகுத்தன? சில உதாரணங்கள் தரவும்.

### *c)* மதிப்பீட்டை ஊக்குவிக்கும் கேள்விகள்:

- பக்கங்கள் 53-55ல் ஐரோப்பாவில் ‘மறுமலர்ச்சி”காலத்தின் எழுச்சிக்கான பல காரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவையாவன:
    - கான்ஸ்டான்டினோப்பிளின் வீழ்ச்சி
    - இத்தாலிய நகரங்களில் ஒரு பணக்கார வர்க்கத்தின் எழுச்சி
    - அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு
    - பல்கலைக்கழகங்கள்
    - கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழிகளின் மறுமலர்ச்சி
    - மனிதநேயத்தின் எழுச்சி

இக் காரணங்களை மிக முக்கியமானவையிலிருந்து மிகக்குறைந்தவையாக எப்படி வரிசைப்படுத்துவீர்கள்? பாடப்புத்தகத்தில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி உங்கள் முடிவுகளை நியாயப்படுத்தவும்.

- வானியல் அல்லது மருத்துவத்தில் மறுமலர்ச்சியின் விளைவுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் என்று விளக்க முடியுமா?

**d) முன்னிருத்தப்படும் கண்ணோட்டங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான கேள்விகள்:**

- ஐரோப்பிய மறுமலர்ச்சியின் தாக்கங்களின் அடிப்படையில் கலை, கட்டிடக்கலை மற்றும் வானியல் போன்ற துறைகளில் பல்வேறுபட்ட முன்னேற்றங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் அவை நகரங்களில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பாகும். இந்த வளர்ச்சிகளால் சமூகத்தில் எந்தக் குழுக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? எந்த குழுக்கள் குறைந்தளவிலான பாதிப்புகளுக்கு ஆளாகியிருப்பார்கள்? அதற்கான காரணம் என்ன? ஏன்?

குறிப்பு: இந் நேரத்தில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்வேறு சமூகக் குழுக்களைப் பற்றிய சில கூடுதல் சூழ்நிலை தகவல்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்க வேண்டியிருக்கும், அதாவது: அறிவுஜீவிகள், பணக்கார வணிகர்கள், கலைஞர்கள், வணிகர்கள், விவசாயிகள், பெண்கள், மதகுருமார்கள். நீங்கள் பாடப்புத்தகத்தைத் தனியாகப் பயன்படுத்தினாலும், இக் குழுக்கள் பல அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட குழுக்களை (உதாரணமாக: அறிவுஜீவிகள், செல்வந்தர்கள், கலைஞர்கள், முக்கிய ஆண்கள்) போன்றோர்களை அடையாளம் காண மாணவர்களுக்கு உதவுவது மற்றும் சமூகத்தில் குறிப்பிடப்படாத பிற குழுக்களைப் பற்றி சிந்திக்க அவர்களுக்கு உதவும் (உதாரணமாக: தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், பெண்கள்).

- கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்கள் மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்தத்தின் தாக்கங்களை நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? பாடப்புத்தகத்தில் உள்ள தகவலுடன் உங்கள் பதிலை ஆதரிக்கவும்.

## iv. எடுத்துக்காட்டு 2 : 10ம் ஆண்டு வரலாற்று பாட புத்தகத்தில் உள்ளடங்கியிருக்கும் மறுமலர்ச்சி தொடர்பான விடயங்கள

இவ் அத்தியாயத்தின் அறிமுகப் பகுதிகள் 8ம் ஆண்டு வரலாற்று பாடப்புத்தகத்தில் உள்ளதைப் போலவே உள்ளன, பல காரண காரணிகள் மற்றும் மாற்றத்தின் துறைகள் பற்றிய கண்ணோட்டத்துடன் உள்ளன. 10ஓம் ஆண்டு வரலாற்று பாடப்புத்தகத்தின் அத்தியாயமொன்றில் அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை ஆராய்வதன் மூலமும், இலங்கையில் ஐரோப்பிய மறுமலர்ச்சியின் தாக்கம் பற்றிய ஆழமான விவாதத்துடனுதம் ஆய்வு தொடர்பாக கேள்விகள் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தில் பயன்படுத்த வேண்டிய காரணம் மற்றும் விளைவு கேள்விகளின் எடுத்துக்காட்டுகள்:

**_a)_ குறித்த வரலாற்று பாடம் தொடர்பான புரிதலை மதிப்பிடுவதற்கான கேள்விகள் பின்வருமாறு:**

- மறுமலர்ச்சியின் போது எந்த சமூகக் குழுக்கள் அதிக செல்வாக்கு பெற்ற தரப்பாக விளங்கயது?
- கான்ஸ்டான்டிநோபிள் வெற்றி ஐரோப்பியர்களை புதிய வர்த்தக வழிகளைத் தேடத் தூண்டியமைக்கான காரணங்கள் யாவை?
- அச்சு இயந்திரம் போன்ற தொழில்நுட்பம் எப்படி உலகம் முழுவதும் பரவியது?

**_b)_ ] பகுப்பாய்வை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகள்:**

- வெனிஸ் மற்றும் ஜெனோவா போன்ற இத்தாலிய நகரங்கள் மறுமலர்ச்சியின் பிறப்பிடங்களாக ஏன் கருதப்பட்டன?
- ஐரோப்பிய காலனித்துவத்தின் மறுமலர்ச்சி ஏனைய கண்டங்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியது?
- பிரிவு 9.2ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐரோப்பிய மறுமலர்ச்சி இலங்கையில் ஏற்பத்திய தாக்கங்கள் தொடர்பிலான பட்டியலை உருவாக்கவும். கீழ்காணும் காலவரையறைகளின் அடிப்படையில் நீங்கள் அதனை வகைப்படுத்துவீர்களா?

    - o குறுகிய கால விளைவு? (மறுமலர்ச்சிக்குப் பிறகு விரைவில்)
    - o நீண்ட கால விளைவு? (மறுமலர்ச்சிக்குப் பிறகு நீண்ட காலம்)
    - o நேரடியான விளைவு? (மறுமலர்ச்சி, இலங்கையில் தாக்கம்)
    - o மறைமுக விளைவு? (மறுமலர்ச்சி, பிற விளைவுகள்), இலங்கை மீதான தாக்கம்)
    - o திட்டமிடப்பட்ட விளைவு? (அந்த காலத்து அறிவுஜீவிகள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் சாதிக்க நினைத்த ஒன்று)
    - o எதிர்பாராத விளைவு? (மறுமலர்ச்சி சிந்தனையாளர்களின் இலக்காக இருக்க வேண்டிய அவசியமில்லை)

    குறிப்பு: ஒரு விளைவு பல வகைகளில் பொருந்தலாம்.
    அது ஏன் அந்த வகையைச் சேர்ந்தது என்று நினைக்கிறீர்கள்?

**c) மதிப்பீட்டை ஊக்குவிக்கும் கேள்விகள் தொடர்பிலான உதாரணங்கள் பின்வருமாறு:**

- மறுமலர்ச்சியின் மிகப்பெரிய குறிப்பிடத்தக்க உலகளாவிய தாக்கமாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள், ஏன்?
- ஐரோப்பாவிற்கு உள்ளேயும் வெளியேயும் கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சி எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியது? உங்கள் பதிலில் மதத்தின் வளர்ச்சிக்கான சான்றுகளுக்கு எதிராக திருச்சபையின் செல்வாக்கு மற்றும் அதிகாரம் குறைந்துவிட்டதற்கான ஆதாரங்களை எடைபோடுங்கள்.
- மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்குப் பாடப்புத்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ள ஐரோப்பிய காலனித்துவம் இலங்கையில் ஏற்படுத்திய பாதிப்புகளில் எவ்வளவு? இவற்றில் எத்தனை விளைவுகள் மறுமலர்ச்சியின் நேரடி பிரதிபலிப்பு அல்லது தொடர்பு மற்றும் பிற காரணங்கள் மற்றும் வளர்ச்சிகளால் (தொழில்துறை புரட்சி போன்றவை) உங்கள் பதிலை வழங்குவதற்கு முன் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

**d) வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான கண்ணோட்டங்களை மேலும் ஆய்வு செய்வதற்கு ஏதுவாக அமையும் கேள்விகள்:**

- மனிதநேயத்தின் எழுச்சி, இடைக்கால காலத்தின் பொதுவான பார்வைகளுடன் ஒப்பிடுகையில், உலகை மக்கள் பார்க்கும் விதத்தை எவ்வாறு மாற்றியது?
- எந்த நபர்கள் மற்றும் குழுக்கள் மறுமலர்ச்சியில் இருந்து அதிகம் பயனடைந்ததாகத் தெரிகிறது? எந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் குறைந்தபட்சம் பயனடைந்திருக்கும்?

*பாடப்புத்தகத்திற்கு அப்பால் செல்லக்கூடிய ஆசிரியர்களுக்கான காரணம் மற்றும் விளைவுகளுடன் தொடர்புபடும் கேள்விகளுக்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:*

பாடப்புத்தகத்தில் கற்பிக்கப்பட்டுள்ளதை விட மாணவர்கள் வரலாற்று பாடங்களை புரிந்து கொள்ள உதவுவதற்காக, ஆசிரியர்கள் கூடுதல் தகவல் மற்றும் ஆதாரங்களை அணுகலாம். உதாரணமாக, EuroClio அமைப்பின் அனுசரனையுடன் “ஹிஸ்டோரியானா” (historiana.eu ) என்ற பெயரில் வரலாற்று சான்றுகள் சரிபார்க்ப உதவிடும் இலவச வலைதள சேவையை ஆன்லைன் வரலாற்று சான்றுகளின் தொகுப்புகள் மறுமலர்ச்சிக் காலத்துடன் தொடர்புடைய காட்சி ஆதாரங்களைக் கொண்ட பல்வேறு மூலத் தொகுப்புகளைக் கொண்டுள்ளது, இந்த இலவச வலைதளமானது வரலாற்று படங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவியாக அமைகின்றது.

இந்த மூல தொகுப்புகளுடன் தொடர்புடைய எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

- மறுமலர்ச்சியின் முன்னோடிகள் இந்த மூலத் தொகுப்புகளில் ஒன்றாகும்.
- மாயாஜாலம் மற்றும் கணிதம்.
- உடற்கூறியல் மற்றும் மருத்துவம் இரண்டும்.
- மறுமலர்ச்சியின் போது தி லாஸ்ட் சப்பர் படங்கள் எப்படி உருவானது?

இந்த பாடத்தின் கற்பித்தலை மேம்படுத்துவதற்காக இலவசமாக வழங்கப்படும் வரலாற்று சான்றுகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்காவின் மறுமலர்ச்சி சங்கம் உட்பட மேலும் பல இணைய தளங்களின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

ஹிஸ்டோரியானா லாஸ்ட் சப்பர் சேகரிப்பைப் பயன்படுத்தி விளைவுகளை ஆராய்வதற்கான கேள்வியின் உதாரணங்கள் பின்வருமாறு:

மறுமலர்ச்சியின் ஆரம்பம் முதல் பிற்பகுதி வரையிலான கடைசி இரவு உணவை சித்தரிக்கும் கலைப் படைப்புகளைப் பாருங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பல பாணிகள் மற்றும் முறைகளைப் பற்றி படிக்கவும். மறுமலர்ச்சியின் ஆரம்ப மற்றும் பிற்பட்ட கட்டங்களுக்கிடையில் கலை வடிவங்களில் என்ன வேறுபாடுகளை நீங்கள் காணலாம்?

*“மருத்துவம் மற்றும் உடற்கூறியல்” தொகுப்பிலிருந்து ஒரு மூலத்தைப் பயன்படுத்தி, விளைவுகளை ஆராய்வதற்கான சில மாதிரி கேள்விகள் இங்கே:*



ஆதாரம்: ரெம்ப்ராண்ட் வான் ரிஜின் (சுநஅடிசயனெவ எயடெ சுதைெ) 1632ஆம் ஆண்டு டாக்டர் நிக்கோலஸ் டல்ப்பினின் உடற்கூறியல் தொடர்பான ஆய்வு செயற்பாடுகளை சித்தரிக்கும் வகையிலான ஓவியமொன்றை வரைந்தார் ஐரோப்பியனாவின் மொரிட்சுயிஸ், 146.

மறுமலர்ச்சியின் போது, உடற்கூறியல் சார்ந்த அறிவு கணிசமாக முன்னேற்றமடைந்தது. கல்வி நிறுவனங்களில் இறந்த உடல்களைப் பிரிப்பது முன்னேற்றத்தின் முக்கிய ஆதாரமாக இருந்தது. காலப்போக்கில், இந்த நடைமுறையுடன் தொடர்புடைய களங்கம் மறைந்து, வழக்கம் போல் மருத்துவப் பள்ளி பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்த வகை மருத்துவ ஆய்வுகள் பொதுமக்களையும் மறுமலர்ச்சிக் கலைஞர்களையும் கவர்ந்தது. அந்த காலகட்டத்தில் 25 வயதே ஆன ரெம்ப்ராண்ட் ஆம்ஸ்டர்டாம் மருத்துவர்களை சித்தரிக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றார். ஜனவரி 1632 இல், இந்த கலைப்படைப்பில் காட்டப்பட்டுள்ள கலைஞர் நிக்கோலஸ் டல்ப் ஒரு உடற்கூறியல் விரிவுரையை கற்பிக்கிறார்

இவ்வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய விளைவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு உதவிடும் கேள்விகள்:

- மறுமலர்ச்சி எவ்வாறு மருத்துவப் படிப்பை நோக்கிய பார்வையை மாற்றியது என்பதைப் பற்றி இந்தக் கலைப் படைப்பின் ஊடாக நமக்கு எவற்றைக் கற்பிக்க முடியும்? படம் மற்றும் விளக்கத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?
- உங்கள் வரலாற்று பாடப் புத்தகத்தில், 56 - 57 ஆம் பக்கங்களில் காணப்படும், இந்த ஓவியத்தை லியோனார்டோ டா வின்சியின் படைப்புகளுடன் ஒப்பிடுங்கள். கலைஞர்களின் பாணிகளின் என்ன அம்சங்கள் ஒத்தவை மற்றும் வேறுபட்டவை என்பதை ஆய்வு செய்யவும்? இந்த இரண்டு கலைஞர்களும் வெவ்வேறு காலகட்டங்களிலும் வெவ்வேறு நாடுகளிலும் வாழ்ந்திருந்தாலும் இருவருக்கும் இடையிலான காணப்படும் ஒத்த தன்மையை விபரிக்கவும்.

ஆய்வு தொடர்பான கேள்விகள்:

சில பள்ளிகளில் மாணவர்களால் தயாரிக்கப்படும் கேள்விளைக் கொண்டு, ஆசிரியர்கள் தங்கள் சொந்த ஆய்வுகளை செய்து, அதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகளை மாணவர்களோடு பகிரலாம்.
இது தொடர்பான உதாரணங்கள் பின்வருமாறு:

- இன்றைய உலகில் எந்த மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட கருத்து மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
- உங்கள் வரலாற்று பாடப் புத்தகத்தில், 56 - 57 ஆம் பக்கங்களில் காணப்படும், மறுமலர்ச்சியின் போது, அறிவியல் கண்டுபிடிப்புகள் பரவுவதைத் தடுக்க தேவாலயங்கள் எவ்வாறு முயற்சித்தது?

# 4b. தலைப்பு 2: ஆய்வு பயணங்களின் ஆரம்ப காலப்பகுதி (Age of Explorations)

## i. கண்ணோட்டம்

கண்டுபிடிப்பு மற்றும் ஆய்வு பயணங்களின் சகாப்தம் குறித்த புரிதலை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்குடம் 8ம் ஆண்டு மாணவர்களுக்கான வரலாற்று பாட புத்தகத்தில் ஆய்வுப் பயணங்களின் சகாப்தம் குறித்து அத்தியாயமொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த பாடப்புத்தகத்தில், 'ஆராய்வு' என்ற சொல் 'நாடுகளைக் கண்டறியும் நோக்கத்தைத் தேடும் செயலைக்" குறிக்கிறது அத்துடன் 'தெரியாத நாடுகளைக் கண்டறிதல்' போன்ற சொற்கள் மற்றும் சொற்றொடர்களை கொண்டு வரலாற்று ஆய்வு பயணம் என்ற விடயம் வரையறுக்கப்படுகிறது. வரலாற்று பாடத்தில் ஒரு அலகாக கற்பிக்கப்படுகிறது. "ஆராய்தல்" என்ற சொல் 8 ஆம் ஆண்டு பாடப்புத்தகத்தில் "நாடுகளைக் கண்டுபிடிப்பதற்கான நோக்கத்தைத் தேடும் செயல்" மற்றும் "புதிய கடல் வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் ஐரோப்பியர்களால் அறியப்படாத நாடுகளைக் கண்டுபிடிப்பது" என்று விவரிக்கப்பட்டுள்ளது. புதிய கண்டங்களைக் கண்டறிய முக்கிய ஐரோப்பிய நாடுகளை ஊக்குவித்த சில சூழ்நிலைகளை ஆராய்வதற்கு முன்பாக வரலாற்று பாடப்புத்தகம் இவ்விடயம் தொடர்புபட்ட சில பின்னணி தகவல்களை வழங்குகிறது. பல்வேறு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து நிதியுதவி பெற்ற சில ஆய்வாளர்களுக்கு வரலாற்று பாடப்புத்தகம் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். புள்ளிவிவரங்கள், வரைபடங்கள் மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தும் போது குறித்த வரலாறு தொடர்பான மூல பகுப்பாய்வுகளை முறையாக மேற்கொள்ளும் வாய்பினை பெற்றுக்கொள்ளலாம்.

ஆய்வு பயணங்களுக்கான வரலாற்று யுகத்தை ஆய்வு செய்யும் போது, அவ்வாறான நிகழ்வுகள் தொடர்பில் சில கூடுதல் தகவல்களை அறிந்திருப்பது முக்கியமாகும். அத்துடன் குறித்த வரலாற்று நிகழ்வு இடம்பெற்ற காலப்பகுதியில் அதுதொடர்பான பின்னணி சூழலைப் பற்றி ஆசிரியர்கள் அறிந்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். 15ம் நூற்றாண்டு ஐரோப்பிய தேசங்களுக்கு ஓர் அசாதாரண நூற்றாண்டாகவே அமைந்தது. ஒருபுறம், ஐரோப்பிய தேசம் பேரழிவுகளை எதிர்கொண்டதோடு, குறித்த காலப்பகுதியில் ஐரோப்பாவில் ப்ளாக் டெத் (Black Death) எனப்படும் ப்ளேக் (Plague) தொற்றுநோய் உயிர்க்காவி நோயாக ஐரோப்பிய நாடுகளில் தீவிரமாக பரவி பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் பேரழிவுக்கு வித்திட்டது. இந்த உயிர்க்காவி நோய், ஐரோப்பாவின் பெரு நகரங்களை பேரழிவின் பாதைக்கு தள்ளுவதாக குறித்த தொற்றுநோய் காரணமாக அமைந்நது. ஐரோப்பாவின் பெருநகரங்கள் சிதைந்து, அந்நாட்டு பொருளாதாரம் நலிவடைந்து போனது.

பேரழிவுகளில் இருந்து தப்பிக்க முடிந்தவர்கள் முன்னோடியில்லாத சுதந்திரத்தை அனுபவித்தனர்: பெரும் மரணங்கள் விவசாயிகளை நிலத்துடன் இணைக்க முயற்சிக்கும் சட்டங்களுக்கு வழிவகுத்தன, இது ஐரோப்பா முழுவதும் வெகுஜன மக்கள் எழுச்சிகளுக்கு வழிவகுத்தது இந்த எழுச்சிகளால் சாதாரண மக்களுக்கு ஊதிய உயர்வு ஏற்பட்டது.

மேலும் சில இடங்களில் 'தாழ்ந்த" மக்கள் பட்டு உடுத்துவதைத் தடுக்கவும், அவர்களின் பண்டிகை நாட்களைக் கட்டுப்படுத்தவும் சட்டங்கள் இயற்றப்பட்டன, ஐரோப்பாவில் இந்த விசித்திரமான காலகட்டம் தனிநபர்களின் பெரிய குழுக்கள் ஐரோப்பாவை விட்டு வெளியேறி தொலைதூர பகுதிகளைக் கண்டறிய ஆர்வமான மனநிலையில் மக்கள் இருந்தார்கள்.

அவர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்த, அவர்கள் குறிப்பாக மசாலாப் பொருட்கள், மதிப்புமிக்க உலோகங்கள் மற்றும் பணப்பயிர்களை பயிரிடுவதற்கான இடங்களைத் தேடினர். தங்கள் சொந்த அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கை வலுப்படுத்தும் முயற்சியில், அரசாங்கங்கள் அடிக்கடி இத்தகைய நோக்கங்களை ஆதரிக்கின்றன.

## ii. முக்கிய விதிமுறைகள் (Key Terms )

அனுசரணை: ஆய்வுப்பயணங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் குறித்த ஆய்வு பயணங்களை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு ஐரோப்பிய தேச அரசாங்கங்கள் நிதியுதவி செய்து ஆய்வு பயணங்களுக்கு தனது ஆதரவினை வழங்கி வந்தது.

பட்டுப்பாதை : ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களின் பலதரப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பாதையாகும்.

## iii. எடுத்துக்காட்டு 1 : தரம் 8 – ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வருகைகள்.

8ம் ஆண்டு பாடப்புத்தகத்தில் கிழக்கில் ஐரோப்பியர்களின் வருகை பற்றி தெளிவுபடுத்தும் வரலாற்று நிகழ்வுகள் பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. "ஐரோப்பியர்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுத்த காரணங்கள்" என தலைப்பிடப்பட்ட அந்த அத்தியாயத்தில் சில முக்கிய ஆய்வுகள் மற்றும் அந்த ஆய்வு செயற்பாடுகளுடன் தொடர்புடைய முக்கிய நபர்களின் விளக்கங்கள் ஆகியவை இந்த அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளது. காரணம் மற்றும் விளைவுகளைப் பற்றிய விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கும் கேள்விகளின் பல்வேறு எடுத்துக்காட்டுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

*இந்த அத்தியாயதைப் பயன்படுத்தி கேட்கக் கூடிய காரணம் மற்றும் விளைவுடன் தொடர்புடைய கேள்விகளுக்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:*

பாடப்புத்தகத்தை மாத்திரம் பயன்படுத்தும் ஆசிரியர்கள், இந்த அத்தியாயத்தின் ஊடாக மாணவர்களின் விமர்சன ரீதியான சிந்தனையை ஊக்குவிக்கும் வாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் காரணம் மற்றும் விளைவுடன் தொடர்புடைய கேள்விகளை அறிமுகப்படுத்துவற்கான வாய்ப்பினை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வார்கள். மேலே விவாதிக்கப்பட்ட கேள்விகளுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

### a) புரிந்து கொள்ள வேண்டிய கேள்விகள்:

- ஐரோப்பியர்களுக்கு மற்ற கண்டங்களைப் பற்றிய குறைந்த அறிவு மட்டும் ஏன் இருந்தது?
- மத்திய தரைக்கடலைச் சுற்றியுள்ள எந்த வணிக நகரங்கள் வர்த்தகத்தின் காரணமாக செழித்து வளர்ந்தன?
- இக் காலகட்டத்தில் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் காணப்பட்ட மூன்று முக்கிய வர்த்தக வழிகள் யாவை?
- இக் காலகட்டத்தில் ஐரோப்பியர்கள் ஏனை கண்டங்களை ஆய்வு செய்வதற்கு உதவியாக அமைந்த முக்கிய காரணிகள் யாவை?
- குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் ஐரோப்பாவின் கண்டத்தைச் சேர்ந்த எந்தெந்த நாடுகள் முன்னணி நிலைகளை வகித்தன?

### b) பகுப்பாய்வு செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகள்:

- கான்ஸ்டான்டினோப்பிளின் வெற்றி ஐரோப்பியர்களுக்கான வர்த்தகம் மற்றும் ஆய்வுகளை எவ்வாறு பாதித்தது?
- அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்கள் ஐரோப்பிய ஆய்வு நடவடிக்கைகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?
- 66ம் பக்கத்தில் காணப்படும் 4.1 என இலக்கமிடப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வரைபடத்தை அவதானித்தால், கான்ஸ்டான்டினோப்பிளின் வெற்றி அந்த வணிக வழிகளுக்கான அணுகலைத் தடுத்திருந்தால், ஐரோப்பியர்கள் ஆசியாவை அடைய விரும்பினால் அவர்களுக்கு எவ்வாறான வாய்ப்புகள் காணப்பட்டன?
- ஆய்வுப் பயணங்களில் உயிராபத்துகள் இருப்பதை அறிந்தும் கூட நாடுகள் ஆய்வாளர்களை தொடர்ந்து ஆதரித்தமைக்கான காரணம் யாது?

### c) மதிப்பீட்டை ஊக்குவிக்கும் கேள்விகள்:

- இந்த நேரத்தில் ஐரோப்பியர்கள் மற்ற கண்டங்களை ஆராய்வதற்கு மிக முக்கியமான காரணி எது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அது மிக முக்கியமான காரணி என்று ஏன் நினைக்கிறீர்கள்?
- கண்டுபிடிப்பு காலத்தில் எந்த ஆய்வாளர் அதிக பங்களிப்பை ஆய்வு பயணங்களுக்காக வழங்கினார், ஏன் அவ்வாறான பங்களிப்பை வழங்கினார்?

***d)*** **வரலாற்றுடன் தொடர்புபட்ட கண்ணோட்டத்தில் ஆழமாக ஆய்வு செய்வதற்கு இவ்வகையான கேள்விகளை முன்வைக்கலாம். அதற்கான உதாரணங்கள் பின்வருமாறு:**

- ஆய்வு பயணங்களின் விளைவாக எந்த தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் லாபம் ஈட்டினார்கள் (அல்லது சிறந்த நிலையில் விடப்பட்டனர்)? ஏன்?
- ஆய்வு பயணங்களின் விளைவாக எந்த நபர்கள் அல்லது மக்கள் குழுக்கள் எதிர்மறையான தாக்கத்துக்கு ஆளாகினார்கள்? ஏன் அவ்வகையான தாக்கத்திற்கு உள்ளாக நேரிட்டது?
- குறித்த காலகட்டத்தில் ஐரோப்பிய ஆய்வு பயணங்களுக்கு யோசனைகளை அதிகளவில் ஆதரித்தவர் யார்? ஆய்வு பயணங்களின் ஆரம்ப காலகட்டத்தில் அதற்கான எதிர்ப்புகளை மேற்கொண்ட தரப்பினர் யார்? ஏன் எதிர்ப்புகளை மேற்கொண்டார்கள்?

## iv. எடுத்துக்காட்டு 2 : 10ம் தர மாணவர்களுக்கான பாட புத்தகத்தின் குறிப்பிட்ட அத்தியாமொன்றில் விபரிக்கப்படும் இலங்கை மற்றும் மேற்கு உலக நாடுகளுக்கிடையிலான வரலாற்று தொடர்புகள் :

10ம் ஆண்டு பாடப்புத்தகத்தில் இலங்கையும் மேற்கத்திய உலகமும் என்ற அத்தியாயத்தில் போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரர்கள் இலங்கைக்கு வந்ததனால் இலங்கையில ஏற்பட்ட தாக்கம் பற்றிய விவாதம் இந்த அத்தியாயத்தில் தெளிவாக இடம்பெற்றுள்ளது. அந்த அத்தியாயத்தின் பெரும்பகுதி, குறித்த வரலாற்று காலப்பகுதியில் இலங்கையிலிருந்த பல்வேறு ராஜ்ஜியங்கள் மீது போர்த்துகீசியர்கள் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு உதவிய குறிப்பிட்ட அரசியல் நிலைமைகள் பற்றிய விரிவான விளக்கங்கள் உள்ளடங்கியுள்ளது. காரணம் மற்றும் விளைவுகளைப் பற்றிய விமர்சன ரீதியான சிந்தனையை மாணவர்களிடத்தில் ஊக்குவிக்கும் கேள்விகளின் பல்வேறு எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

இந்த அத்தியாயத்துக்கு உதவியாக அமையும் காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பிலான கேள்விகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளும் போது அரச பாடப்புத்தகத்தில் உள்ள தகவல்களுக்கு அப்பால் சென்று மாணவர்களின் கற்றலை விரிவுபடுத்துவதற்கு ஆசிரியர்கள் கூடுதல் தகவல்களையும் மூலப் பொருட்களையும் கண்டுபிடிக்க வேண்டும். இந்த அத்தியாயத்தில் பயன்படுத்த வேண்டிய காரணம் மற்றும் விளைவு கேள்விகளின் எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

***a)*** **புரிந்து கொள்ள வேண்டிய கேள்விகள்:**

- ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் காணப்பட்ட மூன்று முக்கிய வர்த்தக பாதைகள் யாவை?
- நாடுகாண் பயணங்களில் வாஸ்கொட காமா அவர்களின் முக்கிய வகிபாகம் யாது?
- போர்த்துக்கேயர்கள் இலங்கையை சென்றடைய வேண்டுமென ஏன் எண்ணினார்கள் ?
- போர்த்துக்கேயர்கள் இலங்கையை வந்தடைந்த போது இலங்கையில் எத்தனை ராசதானிகள் காணப்பட்டன?
- 1638 ஆம் ஆண்டு கண்டி ராசதானி மற்றும் ஒல்லாந்தர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கிய விடயங்கள் யாவை?

***b)*** **பகுப்பாய்வை ஊக்குவிக்கும் கேள்விகள்:**

- அந்த நேரத்தில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிளவுகள் இலங்கையில் போர்த்துகீசிய விஸ்தரிப்பை எவ்வாறு பாதித்தது?
- இலங்கையின் உள்பகுதியை தங்கள் அதிகாரத்தின் கீழ் விரிவுபடுத்த போர்த்துக்கேயரின் முயற்சி ஏன் தோல்வியடைந்தது?
- போர்த்துகீசியர்களுடன் கோட்டே இராச்சியத்தின் கூட்டணியின் குறுகிய கால விளைவுகள் என்ன? இந்தக் கூட்டணியின் நீண்டகால விளைவுகள் என்ன?
- போர்த்துகீசியர்களுக்கு எதிரான போர்களில் கண்டிய இராச்சியத்தின் எதிர்ப்பு முயற்சிகளின் குறுகிய கால விளைவுகள் யாவை?
- கண்டிய இராச்சியத்திற்கும் டச்சுக்கும் இடையிலான கூட்டணியின் நீண்டகால விளைவுகள் என்ன?

***c)*** **மதிப்பீட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையிலான கேள்விகள்:**

- போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றத் தவறியதற்கு மிக முக்கியமான காரணி எது?
- கண்டிய இராச்சியத்தின் எதிர்ப்பை வெளிப்படுத்துவதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போர் எது?
- கோட்டே இராச்சியம் போர்த்துகீசியர்களுடன் கூட்டு முயற்சியில் நியாயமானதா? ஏன் அல்லது ஏன் இல்லை?
- இரண்டாம் ராஜசிங்க மன்னன் டச்சுக்காரர்களை தன் பக்கம் கொண்டு வந்தது நியாயமானது என்று நினைக்கிறீர்களா? ஏன் அல்லது ஏன் இல்லை?
- போர்த்துகீசியர்களும் டச்சுக்காரர்களும் கண்டி இராச்சியத்திற்கு எதிராக படைகளில் சேர வேண்டாம் என்று ஏன் நினைக்கிறீர்கள்?

***d)*** **முன்னோக்குகளை ஆராய்வதற்கான கேள்விகள்:**


- எந்த நபர்கள் அல்லது மக்கள் குழுக்கள் போர்த்துகீசியம் மற்றும் பின்னர் இலங்கையில் டச்சு விரிவாக்கத்தை ஆதரித்திருக்கலாம்? ஏன்?
- எந்த நபர்கள் அல்லது மக்கள் குழுக்கள் போர்த்துகீசியம் மற்றும் பின்னர் இலங்கையில் டச்சு விரிவாக்கத்தை எதிர்த்திருக்கலாம்? ஏன்?
- இலங்கையில் விரிவடையும் போர்த்துகீசிய முன்னோக்கு டச்சு விரிவாக்கத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கலாம்? அவர்களுக்கு ஒரே முன்னுரிமைகள் இருந்திருக்குமா இல்லையா என்பதைக் கவனியுங்கள்.
- ஆய்வுக் காலத்தில் போர்த்துகீசியம் மற்றும் டச்சு விரிவாக்கங்கள் பற்றிய மக்களின் பார்வைகள் காலப்போக்கில் எப்படி மாறியிருக்கலாம்?

**ஏடப்புத்தகத்திற்கு அப்பால் சென்று தமது கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கான காரணம் மற்றும் விளைவுடன் தொடர்புடைய கேள்விகளின் எடுத்துக்காட்டுகள்:**

பாடப்புத்தகத்தில் உள்ள விடயங்களைத் தாண்டி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு உதவும் ஆசிரியர்கள் கற்றலை செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஏதுவான கூடுதல் தகவல் மற்றும் வரலாற்று சான்றுகளை ஆசிரியர்கள் அணுக வேண்டும்.

வாஸ்கோடகாமாவின் முதல் இந்தியா பயணத்தின் ஆதார வரைபடத்தைப் பயன்படுத்தி, கேட்கக்கூடிய கேள்விகள் தொடர்பான உதாரணங்கள் :

Britannica.com வலைதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரைபட சான்று.




விளக்கம்: நாடுகாண் பயணங்களின் போது போர்த்துகீசியர்கள் காற்றினால் இயங்கும் ஆழ்கடல் பாய்மரக் கப்பல்ககளை பயன்படுத்தியதோடு, தங்கள் கடல்வழிப் பயணங்களின் கப்பல்களை திசைமாற்றி பயணிக்கச் செய்யும் வகையிலான திறமைகளையும் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

பாய்மரத் தந்திரங்களைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இந்தியப் பெருங்கடலில் காணப்படும் பருவப் பெயர்ச்சி காலங்களின் அடிப்படையில் காற்று பயணிக்கும் திசையை கணிக்கக்கூடிய யுக்திகளை ஆய்வாளர்கள் மற்றும் வணிகர்கள் நீண்ட காலமாக அறிந்திருக்கிறார்கள். உதாரணமாக, கப்பல்களை காற்றுவீசும் திசையில் பயணிக்கும் திறன்படைத்த மாலுமிகள் தென்கிழக்கு ஆசியாவிலிருந்து தென்மேற்கு ஆசியாவிற்கும் பின்னர் ஆபிரிக்காவிற்கும் பயணிக்க டிசம்பர் முதல் மார்ச் வரையிலான வடகிழக்கு பருவமழையைப் பயன்படுத்தினார்கள். அத்துடன் மே முதல் அக்டோபர் வரையான காலப்பகுதியில் குறித்த மாலுமிகள் ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவிலிருந்து தென்கிழக்கு ஆசியாவிற்கு தென்மேற்கு பருவமழை மூலம் பயணம் செய்யலாம் என்பதை துல்லியமாக அறிந்திருந்தார்கள். இருப்பினும், வடக்கு மற்றும் தெற்கு அட்லாண்டிக் கைர் (புலசந) அமைப்புகளுக்கு, அட்லாண்டிக் பெருங்கடல் முதலில் ஆய்வாளர்களுக்கு கணிக்க முடியாததாகத் தோன்றியது.

அட்லாண்டிக் பெருங்கடலில் பயணிப்பதற்கு தேவையான நுட்பத்தைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பிய தரப்பாக போர்த்துகீசியர்கள் விளங்குகின்றனர். அவர்கள் இந்த நுட்பத்தை "வோல்டா டோ மார்" என்று அழைத்தனர், அதாவது "கடலில் இருந்து திரும்புதல்" என பொருள்படும். வடக்கு அட்லாண்டிக்கில் உள்ள ஆய்வாளர்கள் நேராக தெற்கே ஆபிரிக்க கடற்கரையிலும், ஐரோப்பாவிலிருந்து கேப் வெர்டே தீவுகளுக்குச் சென்று, பின்னர் மேற்கு நோக்கிச் பயணித்து அசோர்ஸ் வழியாக ஐரோப்பாவுக்குத் மீண்டும் திரும்புவார்கள். இருப்பினும், தெற்கு அட்லாண்டிக்கிலிருந்து ஆய்வாளர்கள் மேற்கே ஆபிரிக்காவின் தெற்கு பகுதிக்கு சென்று, கேப் வெர்டே தீவுகள் மற்றும் செயின்ட் ஹெலினா வழியாக கேப் ஆஃப் குட் ஹோப் வரை சென்று, பின்னர் நேராக வடக்கு அட்லாண்டிக் நோக்கிய கப்பல் பயணங்களை மேற்கொண்டார்கள். போர்த்துகீசிய ஆய்வாளரான பார்டோலோமியூ டயஸ், பாய்மரக் கப்பலில் பயணிக்கும் நுட்பத்தை கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் ஆவார், அவர் 1488ல் கேப் ஆஃப் குட் ஹோப் மற்றும் ஐரோப்பாவிற்குப் பயணத்தை முடித்தார். மற்ற போர்த்துகீசிய ஆய்வாளர்களும் பின்னர் ஐரோப்பிய ஆய்வாளர்களும் இதைப் பின்பற்றி குறித்த நுட்பத்தை ஏற்றுக்கொண்டனர்.

**கேள்விகள்:**

- உங்கள் சொந்த வார்த்தைகளில் "வோல்டா டோ மார்" நுட்பத்தை விளக்குங்கள்.
- மாலுமிகளுக்கு அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங் கடல்களுக்குச் செல்ல இரண்டு வெவ்வேறு உத்திகள் ஏன் தேவைப்பட்டன?
- வாஸ்கோடகாமாவின் முதல் பயணத்தின் வரைபட ஆதாரம் "வோல்டா டோ மார்" நுட்பத்தைப் பயன்படுத்துவதை எவ்வாறு காட்டுகிறது?
- ஆசியாவிற்கான ஐரோப்பிய விரிவாக்கங்களில் வோல்டா டு மார் நுட்பத்தின் கண்டுபிடிப்பு எந்த அளவிற்கு குறிப்பிடத்தக்கது?

**மேலதிக வரலாற்றுச் சான்றுகள்:**

- ஐரோப்பா மற்றும் புதிய நிலப்பகுதி முதலியவற்றைக் கண்டறிதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பயணம்.
- ஆய்வுப் பயணங்களுடன் தொடர்புடைய டிஜிட்டல் வடிவிலான பிரதான வரலாற்றுச் சான்றுகள்.
- டிஜிட்டல் வடிவில் அமைந்துள்ள பகுதியமைப்பகள் மற்றும் யூனிட்கள் மற்றும் ஆய்வுப் பயணங்களுடன் தொடர்புடைய கண்காட்சிகள்.

- வாஸ்கோடகாமா இந்தியாபின் தென் கோடியில் அமைந்துள்ள கோழிக்கோடு துறைமுகத்துக்கான பயணம் (இது 20 நாட்களைக் கொண்ட பயணமாக அமையப்பெற்றது.) இந்தியாவில் இருந்து கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு அவர் திரும்பியதை விட (95 நாட்களைக் கொண்ட பயணமாக அமையப்பெற்றது.) ஏன் குறுகிய கால பயணமாக அமைந்திருந்தது ?
- ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளை முடித்த பிறகு அவர்களின் வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது? அவர்கள் ஓய்வு பெற்றார்களா? அவர்கள் தங்கள் ஆய்வுகளை பற்றிய கதைகளை எழுதினார்களா?